# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. V** **Issue 11** **February 2016**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . | 8 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . | 9 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 11 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 14 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 16 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 18 |
| விஞ்ஞானம் தராத விடைகளைத் தரும் ஆன்மிகம் . . . . . . . . . . . | 21 |
| நிதானம். . . . . . . . . . . . . . . . . | 34 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 40 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 56 |
| **அன்னை இலக்கியம்** | |
| சுமுகமே அன்னையின் வெளிப்பாடு . . . . . . . . . . . . . | 58 |


### ஜீவியத்தின் ஓசை

*அன்னை என்பது நல்லது.*
*நல்லது மட்டும் அன்னையாகும்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 295
Para 1

A Consciousness-Force is everywhere inherent in Existence.

It acts even when concealed.
It is the creator of the worlds.
This is the occult secret of Nature.
But in our material world and in our being, consciousness has a double aspect.
There is a force of Knowledge.
There is a force of Ignorance.
A self-aware infinite Existence has an infinite consciousness.

In that, knowledge must be everywhere implicit or operative.
It is so in the very grain of its action.

But we see at the beginning of things an Inconscience, a total Nescience.
It is apparently the base of the creative world-energy.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

ஒரு சித் சக்தி பெருவாழ்வில் எங்கும் உள்ளார்ந்து அமையப் பெற்றுள்ளது.
மறைந்த நிலையிலும் அது செயல்படுகிறது.
அது லோகங்களை உருவாக்கும் சிருஷ்டிகர்த்தா.
இது இயற்கையின் நுண்மையான ரகசியம்.
ஆனால் நம் உலகம் மற்றும் நம் ஜீவனில் ஜீவியம் இரட்டை அம்சங்கள் கொண்டது.
அங்கு ஞானத்தின் சக்தி உண்டு.
அங்கு அறியாமையின் சக்தி உண்டு.
சுய ஞானம் படைத்த அனந்தப் பெரு வாழ்வு அனந்தமான ஜீவியத்தைக் கொண்டது.
அதில் ஞானம் எங்கும் புதைந்து உள்ளதாக அல்லது செயல்படுவதாக இருக்க வேண்டும்.
அதன் செயலின் மிகச் சிறிய கருவிலும் ஞானத்தின் செயல்பாடு உண்டு.
ஆனால் ஆரம்ப நிலையில் நாம் ஜட இருள் எனும் ஒரு பூரண அறிவின்மையைக் காண்கிறோம்.
உலகத்தைச் சிருஷ்டிக்கும் சக்திக்கு இது அஸ்திவாரமாக தோற்றமளிக்கிறது.

This is the stock with which the material universe commences.

Consciousness and knowledge emerge at first.

They emerge in obscure infinitesimal movements.

They emerge at points, in little quanta.

They associate themselves together.

There is a tardy and difficult evolution.

There is a slowly increasing organisation.

There is an ameliorated mechanism of the workings of consciousness.

More and more gains are written on the blank slate of the Nescience.

But still these have the appearance of gathered acquisitions.

They seem to be constructions of a seeking Ignorance.

It tries to know, understand, discover, change slowly.

It struggles into knowledge.

Life here maintains its operations with difficulty.

It is on a foundation of general Death.

First it is in infinitesimal points of life.

It is in quanta of life-form and life-energy.



ஜடப் பிரபஞ்சம் இதையே இருப்பாகக் கொண்டு தொடங்குகிறது.

ஜீவியமும் ஞானமும் முதலில் வெளிவருகின்றன.

அவை இருண்ட மிக நுண்ணிய இயக்கங்களில் வெளிப்படுகின்றன.

அவை சிறிய அளவுகளில் பல மையங்களில் எழுகின்றன.

அவை தம்மை ஒன்றாகச் சேர்க்கின்றன.

அங்கு மெதுவான மற்றும் சிரமமான பரிணாமம் நடக்கிறது.

முறைமை சிறிது சிறிதாக அதிகப்படுகிறது.

அங்கு ஜீவியத்தின் செயல்பாட்டை சிறப்பிக்கும் இயக்கமுறை உள்ளது.

இருண்ட நிலை மேன்மேலும் பல நன்மைகளைப் பெறுகிறது.

இருப்பினும் இவை சேகரம் செய்யப்பட்டு பெறப்பட்டவைகள் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளன.

அவை பரிணாமத்திற்கு விழையும் அறியாமையின் அமைப்புகளாகத் தோன்றுகிறது.

அது மெல்ல அறிய, புரிந்து கொள்ள, கண்டுபிடிக்க, மாற முயற்சி செய்கிறது.

அது ஞானத்தை அடைய சிரமப்படுகிறது.

வாழ்வு இங்குச் சிரமத்துடன் அதன் நடவடிக்கைகளைப் பராமரிக்கிறது.

சாதாரண மரணம் அதன் இச்செயலுக்கு அடிப்படையாகிறது.

முதலில் வாழ்வின் மிகச் சிறிய மையங்களில் அதைச் செய்கிறது.

அது வாழ்வின் ரூபம் மற்றும் சக்தியின் கூறுகளில் அதைச் செய்கிறது.

Then, in increasing aggregates that create more complex organisms.
It creates an intricate life-machinery.

So too, Consciousness establishes a growing but precarious light.
But that light is in the darkness of an original Nescience.

It is in the darkness of universal Ignorance.

## ஜீவிய மணி

*5 ஆண்டுகட்குமுன் உலகப் புகழ்பெற்ற அமெரிக்க ஸ்தாபனம் மக்களின் இந்தியப் பொருளாதார நிலையை ஆராய்ந்து எழுதிய ரிப்போர்ட்டில் இந்தியர் அறிந்திராத பெருமைகள் ஏராளமானவற்றைக் குறித்தனர். அவற்றுள் ஒன்று சில சட்டதிட்டங்களை மற்ற நாடுகள் போல் இந்தியா மாற்றினால் நாட்டில் எந்தப் பெரிய மாறுதலுமின்றி இரண்டு இலட்சம் கோடி ரூபாயை சர்க்கார் ஆண்டுதோறும் பெறலாம் என்றனர். இது அவர்கள் ஆராய்ச்சியின் முடிவு. சமூகம் இத்திறன் பெற்றுள்ளதை அவர்கள் கண்டு ஏற்றனர். சமூகம் இந்தியாவின் ஆன்மிகத் திறனுடையது. அதை அறிந்து மேற்சொன்ன மாறுதல்களைச் செய்தால் அது இரண்டு இலட்சம் கோடியாக இல்லாமல் இருபது இலட்சம் கோடியாகும் என்பதை ஆன்மிகத் தெளிவு கூறுகிறது. உள்ளூர் பள்ளியில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் நேரம் கூடக் குறிப்பதில்லை. குறிப்பதற்கு* **stop watch** *உரிய கடிகாரமிருப்பதில்லை. பார்வையிட வந்தவர் பையன் 9.8 செகண்டில் ஓடியிருக்கிறான் எனக் கண்டார். இவன் ஒலிம்பிக்கில் ஜெயிப்பான் எனக் கூறுவது விந்தையாகாது. ஆன்மிகம் வலிமை, ஆன்மிகம் அமைதி, ஆன்மிகம் செல்வம், ஆன்மிகம் திறன் என்பது ஆன்மிகத் தெளிவு.*



பின், சிக்கலான உயிரிகளை உருவாக்கும் அதிகரிக்கும் கூட்டுத்தொகைகளில் அதைச் செய்கிறது.
அது ஒரு சிக்கலான இயந்திர அமைப்பாக வாழ்வை உருவாக்குகிறது.
அதுபோன்றே ஜீவியமும் வளரக் கூடிய, ஆனால் நிலையற்ற ஒளியை ஸ்தாபிக்கிறது.
ஆனால் மூல அறிவின்மையின் அந்தகாரத்தில் அவ்வொளி உள்ளது.
பிரபஞ்ச அறியாமையின் இருளில் அது உள்ளது.

## ஜீவிய மணி

*இன்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையிலும் புதிய வாய்ப்புகள் ஏராளமாக வந்தபடியிருக்கின்றன. தொழிலில் நிபுணர் எனப் பெயர் வாங்கியவர் ஆச்சரியப்படும்படி 'எனக்குத் தெரியாதே' எனக் கூறும்படி தொழில் வளர்கிறது. ஆரம்ப நிலையிலிருப்பவர் ஏதோ ஒன்றை மனதில் குறித்துத் தேடுகிறார். அவர் அறிவுடை முயற்சியுடன் ஆராயத் தொடங்கினால் தம் நிலைகண்டு இரக்கப்படுவார். அவர் உள்ள நிலை கடைசி நிலை கிடைத்தால் போதும் என்பது. நாட்டிலுள்ள வாய்ப்பு முதல் நிலை காத்துக் கொண்டிருக்கிறது என்பது. 3 பாங்கில் கிளார்க் வேலைக்குப் பரீட்சை எழுதி நிராகரிக்கப்பட்டவர், 3 ஆண்டு உழன்று,* **IAS** *எழுதி, தவறி, ஸ்டேட் பாங்க் ஏஜெண்டானார். அவர் மனம் கிளார்க் வேலையை நாடுகிறது. நாடு* **IAS**, *ஏஜெண்ட் வேலைக்கு அவருக்காகக் காத்திருக்கிறது. வாய்ப்பை அறியாதவர் நிலையிது. அன்னை சூழல் ஊரில் எவரும் ஆதரவு தரமாட்டார் என்ற நிலையில் குக்கிராமவாசிக்கு பம்பாயில் இருந்து பெருவாய்ப்பு கொண்டுவரும். அது உழைப்பை வரவேற்று, உள்ளதை எடுத்துக்காட்டும். உழைப்புக்குப் பலனுண்டு. அறிவுக்குப் பெரும் பலனுண்டு. உணர்ச்சிக்கு உள்ளதெல்லாம் பலிக்கும்.*

இம்மாதச் செய்தி

## அன்னையை நினைக்க பிரச்சனை அடுத்த சந்தர்ப்பம் என்பவன் பக்தன்.



**சாவித்ரி**

**Page 181: To brute bodies gives a soul, a will, a voice**
*விலங்குடம்பிற்கு உறுதியும், குரலும், ஆத்மாவும் கொடுத்து*

✡ மந்திரக் கோலென மாயமாய் கவர்ந்தழைக்கும்

✡ ஜீவனும், உருவமும், எண்ணிலாக் காட்சிகள்

✡ காலத்தில் இடத்தினூடே தீவட்டி கொளுத்தி கொண்டாடும்

✡ இரவெனும் நீண்ட யாத்திரையான இவ்வுலகம்

✡ சூரியனும் கிரகங்களும் அவள் பாதைக்குரிய விளக்குகள்

✡ அவள் எண்ணங்களைப் பொக்கிஷமாகப் பெற்ற நம் பகுத்தறிவு

✡ நம் புலன்கள் அதிரும் அவள் சாட்சி

✡ பாதி பொய், பாதி மெய்யான அவள் அடையாளங்கள்

✡ பலித்த கனவை முழு வாழ்வெனக் கருதி

✡ பிரம்மத்தை இழந்த நினைவு

✡ உலக மாயை எனும் அறியாமையில் இவை முழுச் செயல்கள்

✡ திரை விலகும்வரை, இருளழியும் வரை

✡ அணையாத ஆராய்ச்சி இருளிலும், ஒளியிலும்

✡ முடிவற்ற யாத்திரைக்கு காலமே வீதி

✡ ஒரு வேகம் தீவிரமாகி அத்தனை வேலைகளையும் அற்புதமாக்கி

✡ பிரம்மமெனும் காந்தன் செயல்களின் மூலவன்

✡ காண முடியாத பரப்பினின்று அவனுக்காகத் துள்ளி எழுந்தாள்

✡ இருண்ட கரிய உலகை அசைத்து ஆள முயன்று

✡ மறைந்துள்ள தெய்வத்தின் வாணிகம் அவள் செயல்கள்

✡ இதயத்தின் வேகம் அச்சாகி வார்க்கும் அவள் குணம்

✡ புன்னகையெனும் சூரிய ஜோதி அவள் பொக்கிஷமான அழகு

✡ பெரும் பிரபஞ்ச தரித்திரத்திற்கு வெட்கப்பட்டு

✡ சிறுவெகுமதியால் பெரும் வலிமையை மகிழ்ந்து நாடும்

✡ அவள் விஸ்வாசத்தின் பார்வையைத் தன் காட்சியால் பிடித்து

✡ அவன் பெரிய திருஷ்டியின் அலையும் ஞானத்தை விரும்பி நாடி

✡ கோடிக்கணக்கான கதிர்களை எழுப்பும் சக்தியின் ரூபங்கள் அவை

✡ திரையிட்ட தோழனை கவர்ந்திழுக்க முனைந்து

✡ உலகத்தின் ஆடையின் உள்ளுணர்வில் அவனை ஆழ்ந்து அனுபவிக்க

✡ அவள் அணைப்பை இழந்து தன் ரூபமற்ற சாந்தியை நாடி

✡ இதயத்துடன் உறவாடி கொஞ்சும் பிரியத்தைத் தேடி

✡ நெருக்கம் அதிகமானபின் தூர விலகிய உணர்வு

✡ முரண்பாடே அவள் சுபாவத்தின் இயல்பான சட்டம்

✡ அவனில் அவள், அவளுள் அவன்

✡ மூலத்து முடிச்சை அறியாதவளாக

✡ இறைவனைச் செயலில் இதமாக இழைப்பது அவள் கடமை



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/28. கேட்டுப் பெறுவது பலன்**
**கேளாமல் பெறுவது அருள்**
**கேட்க முடியாதவன் பெறுவது இறைவன்.**

- கேட்பது இயல்பான செயல், கேட்டது கிடைப்பதும் இயல்பான செயல். அது நாமறிந்த ஊரின் செயல்.
- யார் யாரை, எதை, எப்பொழுது, ஏன் கேட்பது என்ற சட்டம் வழங்குகிறது.
- கேட்டுப் பெறுவதை இனிய செயலாக்கும் ஊர் உண்டு. நட்புண்டு. ஒருவர் கேட்டதைக் கொடுக்க முடியவில்லை என மனம் புழுங்கும் பண்புள்ள மக்கள் உள்ள ஊர் அது.
- மேடையில் பேசுபவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லப் பிரியப்படுவார். பதில் சொல்ல முடியாதது வருத்தம்.
- கேட்கக் கூடாததைக் கேட்பவரும் உண்டு. அது எந்த ஊருக்கும் புதியது. அரிபொருளாக இருக்கும்.

  அத்தை மகன் “உன் வீட்டை எனக்குக் கொடு” என்றார்.
  வந்த விருந்தாளி “உங்கள் காரை எனக்குக் கொடுங்கள்” எனக் கேட்டுப் பெற்றவன் தரவில்லை.
  டிராலப் கதையில் பிரபுவிடம் ஏழை வந்து “உங்கள் சொத்தையும் பெண்ணையும் கொடுங்கள்” என்றான். கேட்டவர் உயிர் பிரிந்தது.
  மானேஜராக நியமிக்கும்பொழுதே “இந்தப் பாக்டரியை எனக்குத் தர வேண்டும்” என மூவரைக் கேட்ட பெரிய உள்ளமுடையவர் ஒருவர்.

  *இவை உலக நடைமுறைக்கும் பண்பிற்கும் புறம்பானவை. ஆனால் அரிதாகக் கண்ணில் படும்.*

- அமெரிக்கர் ஒருவர் இங்கு வந்து சில மாதம் தங்கியிருந்தார். அவரைப் பார்க்க வட நாட்டார் ஒருவர் வந்தார்.

அமெரிக்கருக்கு வந்தவரைத் தெரியவில்லை.

“என்னை உங்களுக்குத் தெரியாது. அது பாதகமில்லை. அடுத்த முறை வரும்பொழுது எனக்கு ரேடியோ வாங்கி வர வேண்டும். என் மனைவி டேப் ரிக்கார்ட் கேட்கிறாள். மகனுக்கு வாட்ச் வேண்டும்” என்றார். அமெரிக்கர் அதிர்ந்து போனார்.

*இதன் மூலம் அந்த அமெரிக்கர் இந்தியர்களை “அறிந்தார்”.*

நாடு இப்படியில்லை. ஆனால் ஒருவர் செய்வதும் உலகைப் பாதிக்கும்.

- ஹோட்டல் மூலையில் கடைசி பெஞ்சில் தனியாக வந்து உட்கார்ந்தவர் போண்டா சாம்பார் சாப்பிடுவார் என அறிந்து கேட்காமல் கொண்டு வரும் சர்வர் சீக்கிரம் முதலாளியாகி விடுவான்.
- வீடு கேட்டுப் பெறும் இடமில்லை. கேட்காமல் வீட்டில் எதையும் பெறுவதால், கேட்கும் பழக்கமே அற்றுப் போகிறது.
- மேல் நாட்டுப் பழக்கம் எதற்கும் விண்ணப்பிக்க வேண்டும். நோபல் பரிசுக்கும் நியமனம் தேவை.

  *அதையும் கேட்க முடியாதவருண்டு, கேட்காமல் பெறுவதும் உண்டு.*
- அழுத பிள்ளை பால் குடிப்பதும் உலக வழக்கம்.
- எலிசபெத் தன் திருமணத்தைப் பற்றி நினைப்பதைவிட அக்காள் திருமணத்தை நினைத்தாள், விரும்பினாள், உருகி வருந்தினாள்.

  டார்சி வந்து அவளை “என்னை மணந்து கௌரவிப்பாயா?” எனக் கேட்டபொழுது “என் தமக்கை திருமணத்தைக் கெடுத்தவனாயிற்றே” என்றாள்.

  லிடியாவுக்கு உதவி, திருமணம், விக்காமை நல்வழிக்குக் கொண்டு வருவது, அதற்குப் பணம் தேவை என்பவை எலிசபெத் அறியாதது. ஒன்றிரண்டு தெரிந்தாலும் பிறரைக் கேட்கத் தோன்றாது. *தோன்றினாலும் அவளால் கேட்க முடியாது. அவள் கேட்கவில்லை.*

  *கேட்க நினைக்கவில்லை.*

  *அவள் பெற்றவை லிடியா திருமணம், விக்காம் வேலை,*

  *பிங்கிலி திருமணம் [அதாவது தமக்கை திருமணம்]*

  *தனக்குப் பெம்பர்லியுடன் டார்சி.*

  அவளைப் பொறுத்தவரை அவை சொர்க்க லோகம். கேட்காமல் கிடைத்தவை.
- உலகம் நல்லெண்ணம் பெற்றதால் இன்ஷூரன்ஸ் வந்து தனிப்பட்டவர் அவதியை ஊர் காப்பாற்றுகிறது.
- ஏழ்மையின் கொடுமையை அறிந்தவர் பதவிக்கு வந்தால், தன்னைப் போல் அவதிப்பட்ட மக்களுக்கு மான்யம், பென்ஷன், விதவைப் பென்ஷன் உத்தரவாகிறது.
- வாழ்க்கை நல்லெண்ணத்தால் மனம் விரிந்தால் 1000 ரூபாய் பெறுமான ஏழையின் குடிசை *ஐந்து இலட்சம் விலை போகிறது.*
- *இறைவன் நம்மை இதமாக நினைப்பது அருள். அனுதினமும் நினைப்பது பேரருள்.*
- கேட்காதவர், கேட்க முடியாதவரைப் பேரருள் வலிந்து வந்து ஆட்கொள்ளும்.

## ஜீவிய மணி

*முழுமுயற்சி அறிவுடைய நேர்மையானதானால் அன்றே பலன் தெரியும் என்பதை அனுபவிக்க முன்வர வேண்டும். இது அறிவின் பங்கு. உணர்வுக்குரிய பங்கு உத்தமமானது. அது நல்லெண்ணம். உயர்ந்த நல்லெண்ணம் மனிதனை உத்தமனாக்கும். நாமறிந்த அனைவரும் நாட்டிலுள்ள அத்தனை நல்லதற்கும் உரியவர். அவர் அதைப் பெறுவது என் அதிர்ஷ்டம் என்பது உயர்ந்த நல்லெண்ணம்.*

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 121. செய்த தவற்றிற்குப் பரிசு கிடைத்தால் அவருக்கு யோகம் பலிக்கும்.

- இது ஆபத்தான சொல். ஏனெனில் இதைக் கண்டவுடன் மனிதன் தவறு செய்ய ஆரம்பிப்பான். அது சரியில்லை. *அதுவும் முடிவில் தண்டனையாகாது.*
- சரி X தவறு என்பது மனித மனப்பான்மை.
- மேற்சொன்னபடி ஒருவர் தம் வாழ்வில் கண்டால், அவர் உள்ளத்தில் மனித நிலையைக் கடந்தவர், புறச்செயலில் மனித மனநிலையை விட முடியாதவர்.
- *பெரிய எழுத்தாளர்கட்கு இந்தப் பக்குவம் உண்டு.*
- லூசி 19 வயது சிறு பெண். அழகி எனக் கூற முடியாது. துடியாக இருப்பாள். துடி எனில் காலம் கனிந்து கன்னியாகும் துடிப்பு. சொத்து இல்லை. லுப்டனுடன் தமையன் வேலை செய்கிறார். லுப்டனுக்கு லூசியைப் பெண் எனப் பிடிக்கும். தனிப்பட்ட ஆசை, அன்பு, பிரியம், காதல் போன்ற உணர்ச்சிகளை அறியாதவன். சந்தர்ப்பத்தால் அவளை மணக்கும்படி கேட்கிறான். லூசிக்கு அத்திருமணம் ஆபத்து என்பதுடன், இளைஞன் இளைஞனாகப் பேசுவதையும் அறிந்து தன் ஆழ்ந்த ஆசையையும் மீறி மறுக்கிறாள். *மறுப்பு விருப்பாகிறது.* மீண்டும் கேட்கிறான். லூசிக்குப் புரிகிறது. இந்த ஆசை அரைமணிக்கு மேல் நீடிக்காது எனப் புரிகிறது. *உள்ளபடி மறுக்கிறாள்.* ஆனால் அவளுக்குப் "புரிகிறது". அவள் மறுத்ததால் வேகம் வந்து லுப்டன் அவள் மறுப்பை மீறி மணக்கிறான். மணமானபின் "ஏன் என்னை மறுத்தாய்?" எனக் கேட்கிறான். "*அது உங்களுக்கும் சந்தோஷம் கொடுத்ததை அறிவேன்*" என்றாள்.
- சரி, தவறு செயலிலில்லை, மனத்தில் மட்டும் உண்டு.



- மனத்தை மனிதன் கடந்தவனில்லை. கடந்ததாக நினைப்பவர் பலர்.
- இது போன்ற ஆபத்தான சொற்களைப் பதிலாக வரவழைக்க சாதகர்கள் பகவானைக் கேள்வி கேட்டால், அவர் கூறும் பதில் அமர இலக்கியமாகும். நான் இதை எழுத மாட்டேன். 1938-இல் பகவான் சாதகர்களுடன் பேசும்பொழுது "அசுரர்கள் இனி தேவையில்லை" என்றார். அன்னையின் கணவர் ரிச்சர்ட் இரு உலகப் போர்களை எழுப்பிய சக்தி. 1914-இல் பகவான் அவருக்குக் கொடுத்த மௌனத்தை ஓலமிட்டு உதறி விட்டார். "எனக்கு அப்பொழுதெல்லாம் பொறுமையில்லை" என்றார். *ரிச்சர்ட்டும் மௌனம் பெற்று திருவுருமாறலாம் என்ற வாய்ப்புண்டு என இந்நிகழ்ச்சி காட்டுகிறது.*
- தவறு செய்து பூரணயோக வாயில் திறந்தால் முதற்காரியமாக செய்த தவற்றை, தவறான மனநிலையை கடந்தகால சமர்ப்பணத்தால் திருவுருமாற்ற வேண்டும். தவறினால் அது ஆழத்திலிருந்து எழுந்து வந்து தன் "சொரூபத்"தைக் காட்டும் நேரம் தவறாது வரும்.
- கடந்தகால சமர்ப்பணம் பகவானோ, அன்னையோ முக்கியமாகக் கூறாதவொன்று.
- அவர்கள் தியானத்தையே முக்கியமாகக் கருதவில்லை.
- **Sincerity** உண்மை. சமர்ப்பணம், ஆழ்ந்த மனம் விழிப்பதே அவர்கட்கு முக்கியம். அவை முடியாதவர்க்கு கடந்த கால சமர்ப்பணம் பேருதவி செய்யும்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கேள்வி எழும் வரை செயல்படுவது மனம். கேள்வி எழாவிட்டால் செயல்படுவது சத்திய ஜீவியம். நேரடியாகவோ, மறைமுகமாகவோ சத்திய ஜீவியம் செயல்பட்டால் கேள்வி எழாது.

# அஜெண்டா

## ஐக்கிய ஞானம்

Volume IV, page 414

- ஞானம் நால்வகை; அஞ்ஞானம் ஏழுவகை.
- ஆதியான பிரம்மத்தை ஆத்மா அறிவது ஐக்கிய ஞானம்.
- மேல்மன நினைவு கடந்தகால நினைவை ஞானம் எனக் கருதுவது ஞானம் பிரிந்த நிலை.
- அடிமனம் பிரபஞ்சத்தை அறிவது நேரடியான பிரபஞ்ச ஞானம்.
- யோகி மனம் மௌனம் திருஷ்டியைக் கடந்து நேரடியாக பிரம்மத்தை அறிவது நேரடி ஞானம் **(intuition).**
- ஆதியை மறப்பது ஆதியின் அஞ்ஞானம்.
- பிரபஞ்ச பிரம்மத்தை மறப்பது பிரபஞ்ச அஞ்ஞானம்.
- உலகை அகந்தையெனக் கருதுவது அகந்தையின் அஞ்ஞானம்.
- நாம் காலத்துள் ஒரு துளியாக இருப்பதை அறிவது காலத்தைக் கடந்ததையும் மூன்றாம் நிலைக்காலத்தையும் அறியாத அஞ்ஞானம்.
- ஜீவன் பல பகுதிகளாகப் - மேல்மன ஜீவன், உள்மன ஜீவன், அடிமன ஜீவன், ஆழ்மன ஜீவன், ஜட இருளின் ஜீவன், பகுதிகளை இணைக்கும் ஜீவன், முழுமையான ஜீவன் - பிரிந்ததை அறியாதது ஜீவனுடைய அஞ்ஞானம்.
- மனம், உடல், உயிர் என்பவை ஒன்றாக இல்லாமல் பிரிந்து நிற்பதை அறியாதது அமைப்பின் அஞ்ஞானம்.
- இந்த நேரம் எதைச் செய்வது என அறியாதது நடைமுறை அஞ்ஞானம்.



- *மற்ற ஆறு அஞ்ஞானமும் அழிந்த பின்னரே நடைமுறை அஞ்ஞானம் அழியும்.*
- 10 வருஷமாக வராத கடன் கொடுத்த பணம், 34 வயதில் மணமாகாத பெண், 42-இல் வரனே வராத மகன், **Ph.D.** ஆய்வு முடிந்தபின் 17 ஆண்டாக எழுத முடியாத ஆய்வுக் கட்டுரை, வரவேண்டிய எளிய முதல் நிலை பிரமோஷன் வராது என 12 ஆண்டுகள் கழித்து கைவிட்டது, கால் வீக்கம் 51 வருஷமாக இருப்பது தீர்க்க முடியாது என மறந்தது போன்ற நெடுநாளைய பிரச்சனைகள் பலர் வாழ்வில் உண்டு. **MBBS** படிக்க மனமில்லாத மாணவனுக்கு அட்மிஷனுக்குரிய மார்க்கில் பாதியும் இல்லாத நேரம் அட்மிஷன் கிடைத்து ஸ்காலர்ஷிப் கிடைப்பது போல் நெடுநாளைய பிரச்சனை விழித்து தீர்வது *ஐக்கிய ஞானம்* க்ஷணம் பலித்ததைக் காட்டும்.
- பலித்தது பலிக்கும். நன்றிப் பெருக்கால் ஆத்மா விரிந்தால் நீடிக்கும்.
- ஐக்கிய ஞானம் சத்திய ஜீவிய ஞானம்.
- ஐக்கியம், பரஸ்பரம், சுமுகம் என்ற மூன்று நிலைகளால் சுமுகத்தில் ஆரம்பித்து ஐக்கியத்தில் முடியும் அந்த ஞானம் அவதார புருஷர்கட்கு அனுதினமும் உரியது.
- அன்பர்கட்கு அவை தோன்றுவது பூரணயோக வாயில்.
- நாம் உயிருடனிருக்கிறோம் என்ற ஞானம் *ஐக்கிய ஞானம்.*
- அது மட்டுமே நாம் ஐக்கிய ஞானத்தால் அறிவது.
- பூரண யோக அடிப்படையான முதல் சித்திக்கு மூன்று பாகங்கள் உண்டு.
- அவை ஆத்மாவில் எழும் நேரம் ஐக்கிய ஞானம் மின்னலாக எழும்.

## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

15. உடனே கிடைக்கும் ஆதாயங்களைத் தவிர்த்து நெடுங்காலக் கண்ணோட்டத்தில் எது நல்லதோ அதைக்குறிக்கோளாக வைத்து சாதனைக்கான திட்டம் தீட்டவேண்டும்.

- நோக்கம் சிறியதானால், வாழ்வு குறுகிவிடும்.
- மாமனார் உதவி உடனே உதவும், நெடுநாளைக்கு வாராது.
- சம்பளம் கைமேல் பெறும் உதவி, சுயதொழில் பெரும்பலன் தரும்.
- விளம்பரம் வியாபாரத்தைப் பெருக்கும். சரக்கின் தரம் பிரபலம் பெற்றுத் தரும்.
- ஆங்கில அறிவு அதிகப் பலன் தரும். ஆழ்ந்த திறமையைத் தாய்மொழியே தரவல்லது.
- உள்ளூரிலேயே கிடைக்கும் வேலை சிறியது. பெரிய வேலை உள்ள இடத்திற்குப் போக வேண்டும்.
- பணம் ஆதாயம். குணம் நீடித்த பலன் தரும்.
- மனப்பாடம் அதிக மார்க் தரும். புரிவது பெரிய வேலையைப் பெற்றுத் தரும்.

ஃபைனான்ஸ் கம்பெனிகள் அதிக வட்டி தரும். பாங்க் குறைந்த வட்டி தரும். கம்பெனியில் முதலுக்கே ஆபத்து. உடனே கிடைக்கும் ஆதாயம் மனம் விரும்புவது. அது இலட்சியமாகாது. ஒரு கட்சித் தலைவர் எந்த ஊரிலும் புது ஊழியர் வந்தால் அவருக்கு M.L.A. சீட் தருவதாக வாக்களித்தார். பெருவாரியான ஆதரவு திரண்டது. முடிவாக உறவினர்கட்கே எல்லா சீட்டுகளையும் கொடுத்தார். அவர் கட்சியில் எவரும் ஜெயிக்கவில்லை. உரம் போட்டால் அதிக மகசூல் வருகிறது.



ஆனால் 10 அல்லது 20 வருஷத்தில் மண் பாதிக்கப்பட்டு பயிரிடமுடியாத நிலைக்கு வந்துவிடும். ஒரு தலைமை ஆசிரியர் மகன் அவர் பள்ளியிலேயே படித்தான். எல்லாப் பாடங்களிலும் எல்லா வருஷங்களிலும் முதல் மாணவனாக வந்தான். S.S.L.C-யில் வந்த பிறகு 3 முறை எழுதினான். இண்டர்மீடியட் வந்து 17 முறை எழுதினான். தகப்பனாருக்குப் புதிராக இருந்தது. இவர் மகன் என்பதால் முதல் மார்க் போட்டார்கள் என்பது பிறகுதான் அவருக்குத் தெரிந்தது.

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். உத்தியோகமும் அதுபோன்றதே. தொழில் முதலீடு செய்வதும் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் நடக்க வேண்டியது. எலக்ஷனில் வெற்றி பெறுவது, சரக்கு பிரபலமாவது, திருமணமான பெண் புகுந்த இடத்தில் நல்ல பெயர் பெறுவது, சிறுவயதில் பெறும் கல்வி, பயிற்சி, குடும்பம் தரும் பண்பு, உறவினர் பெருந்தன்மையாகத் தரும் பொருளுதவி, நல்ல பெயரெடுப்பது, நாணயம் எழுவது, பயிரிடுவது, வீடு கட்டுவது, அமெரிக்கா போன மகன் ஆதரவு தருவது போன்ற காரியங்கள் அனைத்தும் ஆயிரம் காலத்துப் பயிர். இளம் வயதில் நண்பர் அனைவரும் திருமணம் செய்துகொள்ளும்பொழுது சன்மானம் தர சிரமமாக இருக்கும். அதுவும் தனக்கு முதல் திருமணமாகி விட்டிருந்தால் அந்தச் செலவைத் தவிர்க்க மனம் நினைக்கும். அப்பொழுது அது சௌகரியம். பல ஆண்டுகள் கழித்து வாழ்க்கை உயர்ந்தபின் மகனுக்குத் திருமணம் செய்யும் காலத்தில் பழைய செயல் பூதாகாரமாக, ஏமாற்றமாக, பெரும் அவமானத்துடன் வரும். செய்வதற்கு ஒன்றுமில்லை என மனம் புண்பட்டு அறிய நேரிடும். மானேஜரை நம்பி கம்பெனியை விட்டுவிட்டு கிளப்புக்குப் போவது வசதியாகத் தோன்றும். நாளடைவில் கம்பெனி படுத்துவிடும், கையை விட்டுப் போகும். வாழ்க்கை விநோதமானது. தினமும் தான் விரும்பும் பெண்ணுக்குக் கடிதம் எழுதியவன் கொஞ்ச நாள் கழித்து அப்பெண் அன்பு நிறைந்த கடிதத்தை அனுதினமும் கொண்டு வந்த தபால்காரனுடன் அவ்வுணர்வை இணைத்துவிட்டதால் அவனையே மணந்தாள் என்று ஒரு செய்தி. இப்படியும் நடக்க

வாழ்க்கை அனுமதிக்கும்பொழுது நாம் கடமையுணர்வைப் போற்ற வேண்டியதன் அவசியம் தெரிகிறது. கல்யாணத்திற்கு வரும் நாட்டாண்மைக்காரர் தடியை வைத்துவிட்டுப் போகும் பழக்கமுள்ளவர். அவர்வீட்டுத் திருமணத்திற்கு தடிகள் 100 வந்தது கிராமத்துக்கதை.

- எதிர்காலம் எட்ட இருப்பதால், தூரத்துப் பார்வை தேவை.
- ஏற்றமிகு எதிர்காலம் வேண்டுவோர், நெடுநாளைய இலட்சியங்களைக் கருத வேண்டும்.
- நாம் ஒன்று செய்தபின், பலன் வேறாக வாராது.

## ஜீவிய மணி

*அன்னை மீது மேலிடும் பக்தி கொஞ்ச நேரத்தில் போய்விடும். மனிதர் மேல் எழும் ஆசை தணியாது. குடும்பப் பாசம், பணத்தாசை, பதவி மோகம் போன்றவை தணியாத ஆசைகள். தணியாத ஆசை தீவிரமானது. தன்னையே பூர்த்தி செய்யும் தன்மையுடையது. இவ்வாசையும் இருவகையானது. இதனுள்ளும் உயர்ந்த பகுதியுண்டு. அன்பால் எழும் ஆசை, கடமையைப் பூர்த்தி செய்ய தேடும் பணம், சேவைக்கான பதவி ஆகியவை தாழ்ந்த ஆசையின் உயர்ந்த பகுதிகள். உயர்ந்த பகுதிகள் ஆசையை அழித்து அன்னையை அடைய உதவும். அதை நாடும் பாமரனுக்குத் தோல்வியில்லை. ஆசையைக் கடக்க முடியும். அன்னை அனுதினமும் அவனளவில் பூரணமாகப் பலிப்பார்.*

*ஆசையே வேண்டாம் என்ற தெளிவும் முடிவும் வந்த பின் நடப்பவற்றைக் கவனித்தால் பழைய ஆசை, நெடுநாள் ஆசை, பால்ய ஆசை, நாமறியாத ஆசைகள் வரிசையாகப் பூர்த்தி-யாவதைக் காணலாம். ஆசை அறவே அழிந்தால் ஆனந்தம் எழும்.*



# விஞ்ஞானம் தராத விடைகளைத் தரும் ஆன்மிகம்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் & சொற்பொழிவு ஆற்றியவர்: திரு. இரத்தினவேலு

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 07.06.2015

மனித வாழ்வின் பிரச்சனைகட்கு விஞ்ஞானம் தந்த தீர்வுகள் அனந்தம். பிளேக், பெரியம்மை போன்ற நோய்களை அழித்ததும், புயல், பூகம்பம் ஆகியவற்றிலிருந்து பெருமளவு தப்பவும் உதவியது விஞ்ஞானம். *அறுவை சிகிச்சையின் அற்புதத்தை பகவான் வியந்து பாராட்டுகிறார்.* விஞ்ஞானம் எவ்வளவு பெரிய சாதனையைச் செய்தாலும் மனிதத்திறமை-யால் செயல்படுவதால், பிரச்சனை உருவாக்குவது மனம் என்பதால் எப்பொழுதும் அதில் குறையிருக்கும்.

*ஆன்மிகம் முழுமையானது. எக்காலத்திலும் ஆன்மிகம் விஞ்ஞானத்தைக் கடந்த திறனுடையது.* விஞ்ஞானத்தின் விடைகள் அறிவுக்குரியவை. ஆன்மிகத் தீர்வுகள் ஆன்மாவுக்-குரியவை. உலகப் போர் முடிந்தபின் எழுந்த உலகப் பிரச்சனைகள் அனைத்திற்கும் ஆன்மிகம் விடை பெற்றுள்ளது. விஞ்ஞானத்தில் விடைகள் இல்லையெனக் கூற முடியாது. உலகம் அவற்றை அறியவில்லையா, ஏற்கவில்லையா என்பவை வேறு கேள்விகள். நீர், பெட்ரோல் போன்றவை இயற்கை சாதனங்கள். எலக்ட்ரிசிட்டி, ரயில் போன்றவை விஞ்ஞானம் புதியதாகக் கண்டவை. மால்தஸ் ஜனத்தொகைப் பெருக்கத்தின் ஆபத்தை எடுத்துக் கூறியது உலகத்தைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பல்வேறு பிராணிகளின் வாழ்வில் பெருக்கம் அழிவுக்கு வழி செய்தது போல் மனிதனுக்கும் அது வந்தது. *உணவு உற்பத்தியின் பெருக்கம் முக்கியமாக அதை ஆபத்தினின்று விடுவித்தது.* உலக மக்கட்-தொகை 450 கோடியை எட்டினால் இன்றைய நிலமும் உற்பத்தி முறைகளும் அதை சமாளிக்கும் என அதற்கு தீர்வு கண்ட விஞ்ஞானம் பெருமையுடையது. விஞ்ஞானம் மறை-பொருளைக் காணும். இல்லாததை உற்பத்தி செய்யும். ஆன்மிக

முறைகள் மனத்தின் திறமைகள் என்பதால் முடிவற்றவை. உலகம் பெரும் பிரச்சனைகளாக இன்று கருதுபவை ஏராளம். முக்கியமானவை 1) அணு ஆயுதம், 2) பொருளாதார நெருக்கடி, 3) வேலையில்லாத் திண்டாட்டம், 4) சூழல் பாதிப்பது, 5) கரி, பெட்ரோல் தீரும் நிலை, 6) தூய நீர் சப்ளை போன்றவை.

நூறாண்டிற்குமுன் மனிதன் 30 வருஷம் வாழ்ந்தான். பழங்காலத்தில் 10 ஆண்டுகளே வாழ்ந்ததாக ஆராய்ச்சி. இன்று 75 ஆண்டுகள் வாழ்வது பெரும்பாலும் விஞ்ஞான சாதனை. நாகரிகம், கல்வி, விஞ்ஞானம் இணைந்து இதைச் சாதித்தன. *விஞ்ஞானம் இல்லாத அற்புதங்களைக் கண்டுபிடிக்கிறது. அது மனிதனை நாகரிகமாக வாழ உதவும். ஆன்மிகம் அகத்தின் முழுமையை நாடுவதால் ஆன்மிக வாழ்விற்குப் பிரச்சனை என்பதேயில்லை. விஞ்ஞானம் ஆன்மிகத்தின் பகுதி.*

**Green Cross International** என்ற ஸ்தாபனம் கோர்பஷாவ் தலைமையில் ஏற்பட்டது. சூழலைப் பாதுகாக்கும் நிறுவனம் அது. அவர்களுடைய முக்கிய கவலை நீர். அவர்கள் கையாளும் முக்கிய முறைகள் நீரைத் தூய்மைப்படுத்துவது, சிக்கனமாகப் பயன்படுத்துவது. மனிதன் தண்ணீர் சப்ளையை அதிகப்படுத்த முடியும் என்று அவர்களால் நினைக்க முடியவில்லை. ஏனெனில் அது ஆன்மிகத் துறைக்குரிய அறிவு. தமிழ்நாடு 40 அங்குலம் முதல் 60 அங்குலம் மழை பெறும் பிராந்தியம். கலிபோர்னியாவில் பருத்தி பயிரிட பயன்படுத்தும் நீரைப் போல் இங்கு 35 மடங்கு தண்ணீர் செலவாவதைக் கண்டு கலிபோர்னியாவில் வாழும் கேரள எக்ஸ்பர்ட் தமிழ் நாட்டில் சில இடங்களில் அம்முறையை அறிமுகப்படுத்தினார். நம் நாட்டு விவசாயம் 85% நீரை விரயம் செய்கிறது என்பது உலகம் அறிந்தது.

*ஆன்மிகம் என்றால் அபரிமிதம். அதன் முறைகளில் முக்கியமானது ஸ்தோத்திரம். கவனம் எனக் கூறலாம்.* ஒரு பொருளை ஆர்வமாகக் கவனித்தால் அப்பொருள் பெருகும் என்பது ஆன்மிக உண்மை.



வில்வதளம் தங்க இலையாக மாறி இந்திய கோயில்கள் கட்டப்பட்டன என்பது வழக்கு. இன்று நாம் கண்ணுறுவ-தில்லை என்பதால் நம்பிக்கையுள்ளவரே ஏற்கக்கூடிய செய்தியது. தண்ணீர் விரயமாகாமல் தடுத்தால்தான் பெற்ற கவனத்தை ஏற்று தண்ணீர் பெருகும் என்று அன்பர்கள் பலமுறை அனுபவத்தில் கண்டுள்ளனர். விரயமாகும் மழை நீரை மீண்டும் போர் கிணற்றுக்குள் செலுத்தும் முறை நெடுநாளாக உலகம் பின்பற்றும் முறை. தமிழ் நாட்டில் ஊர் எல்லைக்குள் அது பின்பற்றப்பட வேண்டும் என்ற கருத்து ஓரளவு நெடுநாளாக இருந்தது. கொஞ்ச நாட்கட்குமுன் அதற்குரிய சட்டம் அமலுக்கு வந்தது.

**Life Response** என்பது உடனே நடக்கும். காலம் தாழ்ந்தும் நடைபெற வல்லது. சட்டம் வந்த ஆண்டிற்குப்பின் ஓராண்டு கழித்து 82 அங்குலம் மழையைத் தமிழ் நாடு பெற்றது. இம்முறை ஊருக்குள் மட்டும் அமல் செய்யப்பட்டது. இறைப்புப் பாசனக் கிணறுகட்கு சட்டம் இதுவரை வரவில்லை. கவனம் அபரிமிதம் தரும் என்பது புதிய கொள்கையில்லை. கருமியின் கவனம் அவனுக்குப் பெரும் பணம் தருகிறது. கவனம் செலுத்தப்பட்டது அதிகரிப்பது என்பதை ஆயிரம் துறைகளில் உலகம் கண்டுள்ளது. கல்வி, பணம், மின்சாரம், ரோடு, போன் என்ற எல்லாத் துறைகளிலும் நாம் இக்கொள்கையைக் காண்கிறோம். *எப்பொருள் குறையானாலும் கவனம் குறையை நிறையாக்கும்.*

விஞ்ஞானம் அறிவின் சிகரம். பூமி சூரியனைச் சுற்றுவதைக் கண்டது விஞ்ஞானம். சந்திர மண்டலத்தை எட்டிய மேதைகள் விஞ்ஞானிகள். *ஒரு விஷயம் பிரச்சனையாக இருக்கிறது, தீர்க்க முடியவில்லை என விஞ்ஞானிகள் கூறுவது விநோதம்.* மனிதன் பேரறிவு பெற்ற பின்னும் சிறிய விஷயங்களில் எவரையும் போல் நடக்கக்கூடியவன். நெல் பயிரிடுபவனுக்கு இலாபம் வராது, வந்தால் சிறு இலாபமே வரும் என்பதை *உழுபவன் கணக்குப் பார்த்தால் உழவுகோலும் மிஞ்சாது* என அனுபவம் கூறியது. கரும்பு பணப்பயிர் எனப் பெயர் பெற்றது. கிராமத்தில்

குடிசைகள் அதிகம். கல் வீடு அரிது. *கரும்பு குடித்தனக்காரன் கல் வீட்டுக்காரன் என்பது சொல்.* கரும்பு மட்டும் பணம் தருவதில்லை. பணப்பயிர் எனப் பெயர் பெற்ற பயிர்கள் ஒன்று இரண்டில்லை. ஓராயிரமில்லை எனினும் எவரும் அறிந்தவை ஏராளம். எந்தக் காய்கறியும் பெரும் பணம் தருவதை நாம் அறிவோம். நெல் 300 ரூபாய் கொடுக்க சிரமப்படும் நேரம் கத்திரிக்காய் 30,000 ரூபாய் இலாபம் கொடுத்ததைக் கண்ட கிராமத்தார் அனைவரும் அதைப் பயிரிட்டனர். எவ்வளவு இலாபம் தரும் எப்படித் தரும் என்றெல்லாம் ஒருவர் கேட்டபொழுது, “ஏன் இந்தக் கேள்வியெல்லாம்? கத்திரிக்காய் பயிரிடும் கிராமத்தில் குடிசையேயில்லை” என்று பதில் சொன்னார் ஓர் அனுபவசாலி. வேறொரு பணப்பயிரைக் கணக்கெடுத்தவர் அதைப் பயிரிடுபவரை விபரம் கேட்டார். விபரத்தைப் பாதியில் நிறுத்தி *“செடியை நட்டு, பணத்தைப் பலனாக உருவிக் கொள்ளலாம்”*என்றார். படிக்காத விவசாயியின் நிலை மட்டும் இல்லை இது.

1928-இல் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. செட்டியார் அதைத் தன் பெயரில் கட்டினார். அதற்குமுன் தாயார் பெயரில் கல்லூரி நடத்தினார். அதன்முன் தகப்பனார் பெயரில் பள்ளிக்கூடம் நடத்தினார். அத்தனையும் சிதம்பரத்தில் ஏற்படுத்தினார். சிதம்பரத்திலுள்ள வசதியான குடும்பங்களில் உள்ள புத்திசாலிப் பிள்ளைகளில் ஒரு சிலரே கல்லூரியில் சேர்ந்தனர். இலங்கை, கேரளா, பங்களூர், ஆந்திரா மாணவர்கள் பல்கலைக் கழக 2000 பேரில் 200 பேராவர். ஏன் இந்த நிலை?

உலகப் புகழ் பெற்ற **IBM** வாட்சனும், **Dell** கம்பெனி முதலாளியும், **Bill Gates**-ம், பெர்ட்ரண்ட் ரஸ்ஸலும், வின்ஸ்டன் சர்ச்சிலும், காந்திஜியும் இதே பாஷையைப் பேசினால் *எப்படிப் பிரச்சனை தீரும். யார், ராஜா நிர்வாணமானவர் எனக் கூறப் போகிறார்கள்.* அன்னையை மூன்று தலைமுறையாய் அறிந்தவர் வீட்டில் 30 படம் வைத்திருப்பவருக்கு 10 ஆண்டான பிரச்சனையை அன்னையிடம் கூறத் தோன்றுவதில்லை. ஏன்?



ஏன் என்பதைவிட இனி அத்தவற்றைச் செய்யக்கூடாது என்று கூற முடியுமா? இன்று நினைக்க முடியுமா?

சிறுவர் 1 நிமிஷத்தில் 118 முறை சுடும் துப்பாக்கியுடன் விளையாட ஆசைப்படுவதை *அடிப்படை மனித உரிமை என்று கொண்டு* ஆண்டில் சில முறை பலர் சுட்டுக் கொல்லப்பட்டபின் “நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை” என்ற அதிகம் படித்த மக்களிடையே அறிவுக்குரிய செயலைப் பேசாமலிருப்பது அறிவுடை செயல். எவரும் தம் சொந்த வாழ்வில் அவரைச் சுற்றி அதுபோன்ற 10 பிரச்சனைகளைக் காண்பர். தன் சொந்த விஷயத்தில் 20-ஐக் காண்பர். *உலகில் இதுபோன்ற பெரிய பிரச்சனைகள் பல உண்டு. அங்குத் தேவைப்படுவது சிந்தனை, தீர்வு இல்லை.* செயல் அணுகுண்டை என்ன செய்வது எப்படிச் செய்வது யார் செய்வது என்பவை விதண்டாவாதமானவை. செய்ய முடிந்ததை க்ஷணம் தாமதிக்காமல் செய்வது அறிவுடமை. பெர்லின் சுவர் அழிந்ததை அறியாத உலகம் அணுகுண்டை ஒழிக்க வழி கேட்பது ஆச்சரியமில்லை.

விஞ்ஞானம் முன்னேறும்பொழுது அறிவும், செல்வமும் அபரிமிதமாக முன்னேறின. *விஞ்ஞானம் மனத்தின் செயல். மனம் இரண்டாகப் பிரிந்து செயல்படும்.* விஞ்ஞானத்தால் வரும் செல்வம் இரு முனைகளில் பெரும் செல்வமாகவும் அதற்கெதிரான ஏழ்மையாகவும் பலன் தரும். *ஆன்மிகம் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.* அதன் செல்வம் உலகில் அனைவரும் பெறும்படி உற்பத்தியாகும். அத்துடன் ஆன்மிகச் செல்வம் அனந்தமானதால் விஞ்ஞான செல்வத்தை அது அளவுகடந்து தாண்டிச் சென்றது. பூமி சூடாவதை ஆன்மிகம் தடுக்கும். விஞ்ஞானம் இன்றுவரை அதற்குரிய விடையை எழுப்பவில்லை. பிரச்சனையைத் தீர்க்க விஞ்ஞானம் ஆராய்ச்சி செய்கிறது. ஆராய்ச்சியெனில் ஒன்றைப் பலவாகப் பிரித்து சிந்தனை செய்வது. ஆன்மிகம் தொகுத்து உணர்கிறது. *அமெரிக்கர் இன்று உலகை ஆள்வது அவர்கள் செல்வம் பலமானதாக இருப்பதால்.* வாழ்வில் அனந்தத்தைக் கண்டதால் அமெரிக்க வாழ்வு இன்று செல்வம் நிறைந்ததாக இருக்கிறது.

ஆன்மிக முறைகள் அனைத்தும் அனந்தத்தைக் காணும் முறைகள். மெஷினைப் பின்பற்றினால் உள்ள வேலைகள் அழிகின்றன. மனிதனைப் பின்பற்றினால் மனித வாழ்வு ஆன்மிக வளம் பெறும். ஆதி மனிதன் விழித்த நேரம் எல்லாம் வேலை செய்தான். நாமறிந்தவரை மனிதன் 12 மணி, 14 மணி வேலை செய்தவன் இப்பொழுது 8 மணி வேலை செய்கிறான். 8 மணி 3 மணி 1 மணியானால் நாகரிகம் வளரும், பண்பு செழிக்கும், மனவளம் அதிகப்படும். மனிதன் பிறந்த பயனடைவான். ஸ்டாக் எக்ஸ்சேன்ஜ் ஏராளமான பணம் உற்பத்தி செய்து 1% மக்கள் உலகில் அனைத்துச் செல்வத்தையும் பெற்றுள்ளனர் எனப் பேசுவது அறிவுக்குப் பொருத்தமானது.

ஓலையும் எழுத்தாணியும் போய் பேனாவும் பேப்பரும் வந்தது நாகரிகச் சின்னம். *அதை மனிதன் மறுக்கவில்லை.* கோடிக்கணக்கான பனைமரங்களை வளர்த்து ஓலையையும் எழுத்தாணியையும் மனிதன் போற்றவில்லை. விஞ்ஞானம் **economic** நோபல் பரிசு தருவது அதுபோன்ற செயல். அறிவுக்குப் புறம்பானது. விவசாயம் உணவு தந்தது. 6 மாத ஓய்வளித்தது. வியாபாரம் மனித வாழ்வை விசாலப்படுத்தியது. *பணத்தை உற்பத்தி செய்தது.* உணவைத் தானே உற்பத்தி செய்த மனிதனைப் பணம் என்ற புதிய ஒன்றை உற்பத்தி செய்ய வியாபாரம் உதவியது. பணம் நாகரிகச் சின்னம். கல்வி, கலை, இலக்கியம், நாடகம், பண்பு ஆகியவை எழ உதவியது பணம். பாங்க் அதை அதிகமாக வளர்த்தது. அதுவே மனிதனுக்குரியது.

உலகில் அபரிமிதமான இயற்கை அமைப்பு காற்று. நமக்குத் தேவையானது சிறிதளவு. உள்ளது பெருமளவு. *மனிதன் பயன்படுத்தும் பணம் அளவில் சிறியது. உலகில் “வெளிப்படாத” பணம் அளவுக்குட்படாது.* உலகம் அதை இன்று அறியவில்லை. “கல்லாதது உலகளவு” என்பது பணத்திற்கும் வாய்ப்பிற்கும், மகிழ்ச்சிக்கும் பெரிதும் பொருந்தும். கடற்கரையில் வாழ்பவனும் வீடுகட்டி நான்கு பக்கமும் சுவரால் அடைத்து **Fan** போட்டு காற்றை அனுபவிப்பது நம் இன்றைய நிலை.



மொட்டை மாடியில் இயற்கையாக வீசும் காற்றை எல்லோரும் அனுபவிப்பதில்லை. *ஏழை நாடுகளில் பணமில்லையென்பதும் மேலை நாடுகளில் வேலையில்லை என்பதும் சூழல் சூடு வளர்க்கிறது என்பதும் மனிதன் தன் அறியாமையை பல்வேறு கோணங்களில் அனுபவிப்பதாகும்.* இவை அர்த்தமற்ற அறியாமை. நமக்கு எதைச் செய்வது எனத் தெரியாது. முடிந்ததைச் செய்வோம். பிரியமானதைச் செய்வோம். போன் வந்து 50 ஆண்டானபின் போனில் பேச விருப்பப்படாத பேரறிஞர்களை உலகம் அறியும். *அறியாமை அனைவருக்கும் உரியது. அறியாமையை அற்புதமான தெய்வமாக வர்ணித்து வழிபட்டு அளவுகடந்து அப்படிச் செயல்பட்டு கஷ்டம் வந்து கெட்டது தீர்க்க முடியாத பிரச்சனையிருக்கிறது என்று மனிதன் ஓலமிடுவது நாகரிகமாகாது.* உடனே மனிதன் கைவிட வேண்டிய காரியம். அதை இன்று உயர்ந்த உலக மேடைகளில் கூற எவருக்கும் தைரியமில்லை. கூறினால் துப்பாக்கியால் அறிஞர்கள் சுடுவார்கள்.

குலுக்குசீட்டு, லாட்டரி, இன்ஷுரன்ஸ் ஆகியவை *பலருடைய வலிமை ஒருவருக்குப் பயன்பட ஏற்பட்ட முறைகள்.* லாட்டரியில் பலன் ஒருவருக்கே வரும். அது சான்ஸ். குலுக்குச்சீட்டில் பலன் அனைவருக்கும் வரும். ஒரே சமயத்தில் வராது, ஒன்றன்பின்னால் ஒன்றாக வரும். இன்ஷுரன்ஸில் *நஷ்டம் ஈடு செய்யப்படும். நஷ்டம் வராதவரை இலாபமில்லை.* வீடு கட்டும் சொஸைட்டி என்பதும் இதுபோன்ற ஒரு திட்டம். ஆனால் அங்கு எல்லோருக்கும் முடிவான பலன் சேர்ந்தவுடன் கிடைக்கும். எப்படி? முதல் மூன்று முறைகளும் பயன்படுத்துவது அவர்களுடைய பணம். அதற்கு அளவுண்டு. அதனால் ஒன்றன்பின் ஒன்றாய் வருவது நஷ்டம் ஏற்பட்டால் மட்டுமே பலன் பெறுவது. ஒருவருக்கு அனைவர் பணம் போகும் நிலை. வீடு கட்டும் சொஸைட்டி திட்டத்தில் 1000 பேரிருந்தால், கோடி பேருள்ள சமூகம் 1000 பேருக்கு உதவ முன் வருகிறது. அடுத்த உயர்ந்த நிலையான *சமூகம் சிறிய சொஸைட்டிக்கு உதவ முன்வருவதால் அளவுகடந்த உதவி அனைவருக்கும் காலதாமதமின்றி கிடைக்கிறது.* விஞ்ஞானம்

மனித அறிவால் மனித குலத்திற்கு உதவுவது குலுக்குச்சீட்டு போல் அமைகிறது. ஆன்மிகம் மனித நிலையைவிட உயர்ந்தது என்பதால் அதன் உதவி அளவு கடந்தது. *அத்துடன் அது கடனைச் சொத்தாக மாற்றவல்லது.* சீட்டு, இன்ஷுரன்ஸ் உள்ளதைக் காப்பாற்ற உபயோகப்படுத்த முயல்வது. வீடு கட்டும் திட்டம் **(creative and productive)** மனையை வீடாக மாற்றுவதால் மனைக்கு இல்லாத விலையைப் புதியதாக ஏற்படுத்துகிறது. நான்கு லட்ச ரூபாய்க்கு வீடு கட்ட ஆரம்பத்தவர் வீட்டைக் கட்டி முடிக்கும்பொழுது அதனை நான்கு லட்சத்திற்கு மேலும் மதிப்பிடுவார்கள். அது ஆறு லட்சமாகவும் மாறும் பத்தாகவும் உயரும். இது ஆன்மிக சட்டத்தின் அற்புதம்.

கடன் வாங்கி கொடுக்க முடியாதவர் தம் மனநிலையை மாற்றிக் கொண்டால், கடனளவு சொத்து சேரும் என்பது இந்த அம்சத்தால் எழுவது. *செல்வம் மனநிலையைப் பொறுத்தது. செல்வத்தை மட்டும் பொறுத்ததில்லை. மனத்தை மட்டும் பொறுத்-ததில்லை. மனநிலையைப் பொறுத்தது.* நிலை தாழ்ந்திருந்தால் கடன் எழுகிறது. நிலை உயர்ந்திருந்தால் கடன் சொத்தாக மாறும்.

சூழல் பாதிக்கப்படுவது தாழ்ந்த மனநிலையால் ஏற்படுவது. பெட்ரோல், கரி பயன்படுபவை. நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். அது சுயநலமான மனப்போக்கு. பரநலமான மனப்போக்கு அதற்கு எதிரானது. கரியை எரித்தால் புகை எழும். சூழல் கெடும். மின்சாரத்தைப் பயன்படுத்தினால் சூழல் அந்த அளவுக்குக் கெடாது. *சூழலின் நிலை உயர நாம் என்ன செய்யலாம் எனக் கருதினால், மனிதனுக்கு வசதி செய்வதாக அமையும்.* எலக்ட்ரிசிட்டி எலக்ட்ரானிக்ஸ் ஆனால் செல்போன் கட்டணம் குறையும். சூழல் அமைதியாக அழகாக இருக்க நினைப்பது ஆன்மிகப்போக்கு. அது மனித மனநிலையை உயர்த்தும். மனநிலை உயர்ந்தால் சூழல் கெடாது, உயரும். ரோடு போட்டால் வசதி வரும். தென்னை மரத்தை ரோடு ஓரத்தில் நட்டால் தோப்பில் உள்ள மரத்தைவிட அதிகமாகக் காய்க்கும். மனிதனுக்குச் செய்யும் வசதி, அவன் மனநிலையை உயர்த்தி



அதனால் சூழலை உயர்த்துவது என்பது ஆன்மிக சட்டம். **Lord of Snow, Fir** மரங்கள் நட்டவுடன் அவ்விடம் தேடி வருவது போல், மனம் ஆத்மாவில் உறைவதால் மனநிலை உயரும் பொழுது ஆத்மா அதிகமாகச் செயல்பட்டு சூழல் கெடுவதைத் தடுத்து, சூழலை உயர்த்தும். சுத்தமான ஊர்களில் வியாதி வருவதில்லை என்பதை இந்தத் தத்துவப்படி அறியலாம். மனிதனைக் கருதி, மெஷினை இரண்டாம் பட்சமாக்கினால், அளவு கடந்து வேலை உற்பத்தியாகும். வேலையில்லை என்ற நிலை எழாது. ஆங்கிலேயரால் இந்தியா கல்வி, போக்குவரத்து, சுத்தம், சுகாதாரம் பெற்றதை சாதகர்கள் எடுத்துக் காட்டிய பொழுது பகவான் அவையில்லாமலிருப்பதே நமக்கு உயர்வு என்றார். ஆன்மிக உயர்வுக்கு அந்த முக்கியத்துவம் உண்டு.

1947-இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. அந்த ஆண்டு ஜனவரி மாதம் பெரியவர்கள் பேசும்பொழுது *"சுதந்திரம் வருமா? அப்படி வந்தால் நம் வாழ்நாளுக்குள் வருமா?"* எனப் பேசினார்கள். கோர்பஷாவும் **Kohl**-உம் பெர்லினைப் பற்றிப் பேசியது போன்றது இது. நேருவும் பட்டேலும் காந்திஜி பேச்சைத் தட்டினர் என்பதை அதுவரை எந்த இந்தியனாலும் நம்பியிருக்க முடியாது. **March** 22-க்குப்பின் அது நடந்தது. இந்திய வைஸ்ராயை எவரும் **Your Excellency** என்றே அழைப்பார்கள். ஓராண்டுக்கு முன் நேரு 1946-இல் சிங்கப்பூர் போன பொழுது மௌண்ட்பேட்டனை முதலில் சந்தித்தார். அவர் பெயர் **Louis**. நெருக்கமானவர்கள் **Dicky** என அழைப்-பார்கள். காங்கிரஸில் நேருவை ஜவஹர் என அழைப்பவர் அவருக்கு மூத்தவரான காந்திஜி, பட்டேல், ஆசாத், பிரசாத், ராஜாஜி, **B.C.** ராய் மட்டுமே. மௌண்ட் பேட்டனுக்கு 38 வயது. ஆங்கிலேயர் என்பதால் ஜவஹர்லால் என சிங்கப்பூரில் சந்தித்ததிலிருந்து அழைப்பது அவர் பழக்கம். அதுவரை காங்கிரஸ் தலைவர்களுக்கும் வைஸ்ராயிற்கு-மிடையே பரஸ்பர சுமுகமான நம்பிக்கையில்லை. அரசியல் அதற்கு வழி செய்யாது. **Dicky**, ஜவஹர்லால் என வைஸ்ராயான பிறகும் இருவரும் ஒருவரையொருவர் அழைத்ததால் *நம்பிக்கை*

*மிக நெருக்கமாயிற்று.* சர்க்கார், அரசியலில் இப்படிப் பழக முடியாது. சர்க்காரும், அரசியலும் விஞ்ஞானம் போன்ற துறைகள். நட்பு ஆன்மிகமயமானது. ஆன்மிகம் புது வழியை உற்பத்தி செய்து குறுகிய காலத்தில் சுதந்திரம் வந்தது.

*பிரம்மத்தை அறிந்தால் எதையும் அறியலாம் என்பது உபநிஷதம்.* அது அக்ஷர பிரம்மம், அசையாதது. விஞ்ஞானம் அது போல் பேச வழியில்லை. அக்ஷர பிரம்மமும், க்ஷர பிரம்மமும் இணைந்து முழுப் பரப்பிரம்மமாவதை பகவான் கூறுகிறார். *பரப்பிரம்மத்தை அறிந்தால் எதையும் செய்யலாம் என்று நாம் இப்பொழுது அறிவோம்.* இன்று வெனிசுலாவில் விஞ்ஞானிகளை துன்புறுத்துகிறார்கள் எனச் செய்தி. விஞ்ஞானி உலகில் முன்னோடி. அவனை சமூகமோ, சர்க்காரோ துன்புறுத்தினால் அது முன்னோடியான இலட்சியங்களைப் பாதிக்கும். உலகெங்கும் எதிர்ப்பு எழுகிறது. இதனுள் ஓர் உண்மையுள்ளது. அது பேருண்மை. எந்த உயர்ந்த இலட்சியமும் உயர்வாக இருக்கும்வரை அதற்கு இறைவனின் பாதுகாப்புண்டு. பெரும் இலட்சியம் தன்னிலையினின்று இழிந்தால் அது சமூகத்தால் தாக்கப்படும். மதக்கோட்பாட்டின் மூட நம்பிக்கைகளை எதிர்த்து எழுந்தது விஞ்ஞானம். அதுவே அதன் பெருமை. பெருமை பிரபலமானபின் வழக்கம்போல் மூடநம்பிக்கையை எதிர்த்த விஞ்ஞானம் மூட நம்பிக்கையின் உறைவிடமாகும். பல ஆண்டுகளாக இம்மாறுதல் கொஞ்சம் கொஞ்சமாக எழுவதால், இன்று வெனிசுலாவில் இந்த நிலை. *இதை எதிர்கொள்ளும் விஞ்ஞானிகள் தங்கள் இலட்சியத்தை சோதனை செய்து மூட நம்பிக்கைகளை அகற்றினால் விஞ்ஞானமும், விஞ்ஞானிகளும் விடுதலை பெறுவர்.*

வாழ்வின் பிரச்சனைகளையெல்லாம் விஞ்ஞானியால் தீர்க்க முடியும். இன்று அவனுள்ள நிலையில் அவனே அவனுக்கும் பிரச்சனையாகிறான். வாழ்வு உடலாலும் உயிராலுமானது. விஞ்ஞானம் அறிவின் கருவி. சிறியலோக உடல், உயிர் எழுப்பும் பிரச்சனையை பெரியலோக அறிவு எளிதில் தீர்க்கலாம். விஞ்ஞானம் அறிவுலகக் கருவி. *பெரியது ஓரளவு குறையானால் எதிராக மாறும் என்ற இரஸவாத சட்டம் உலகில் செயல்படுவதால்,* விஞ்ஞானம் மூட நம்பிக்கையை சிறிதளவு பாராட்டினாலும் சிறுலோகப் பிரச்சனைகளையும் தீர்க்கும் திறனிழந்து விடுகிறது. விஞ்ஞானம் பெரியது. ஆன்மிகம் அதைவிடப் பெரியது. விஞ்ஞானம் தீர்க்க முடியாத பிரச்சனைகளை ஆன்மிகம் தீர்க்கும். விஞ்ஞானம் தீர்க்கும் பிரச்சனைகளை ஆன்மிகம் அதைவிட எளிமையாகத் தீர்க்கும். சிறுநீரகக்கல்லை பிரார்த்தனை கரைத்தது அது போன்றது.

வாழ்க்கையில் பிள்ளைகள் பெரிய வாய்ப்பு. அத்துடன் மாபெரும் தலைவேதனை. *மேல் நாட்டாருக்கு பிள்ளைகள் சிம்ம சொப்பனம்.* அற்புதமான மகனை படித்த பெற்றோர் புரிந்து கொள்ள முடியாமல் வேதனையுற்றனர். *எந்த விஞ்ஞானமும் விளக்கமுடியாத விடையை ஆன்மிகம் கூறுகிறது:* “நீயே உன் மகன். அவன் திருந்த வேண்டுமானால் நீ திருந்த வேண்டும்.” இது அற்புதமான விடை. விஞ்ஞானத்திற்கு இந்தப் பிரச்சனை என்னவென்றே விளங்கவில்லை. இதை ஏற்றுப் பலன்பெற பூரணயோகத்தை ஏற்க வேண்டும். மேலும் கூறவேண்டுமானால் மகனுக்கு தன்னையறியுமுன் தன் பெற்றோரை அறிய வேண்டும். இந்த ஞானம் இன்று உலகில் இல்லை. எலிசபெத் விக்காம் சொன்ன அவதூற்றை நம்பினாள். டார்சியின் நடத்தை அதற்குதவியது. ஆனால் டார்சி அவளுடைய தவற்றுக்கு அவள் பெற்றோர் எப்படிப் பொறுப்பு என்பதை எடுத்துக்காட்டியதை அவளால் பெரும் போராட்டத்திற்குப்பின் ஏற்க முடிந்தது. *டார்சி தன் பெற்றோரால் சுயநலமாக வளர்க்கப்பட்டதை அறிந்து எலிசபெத் கூறிய உண்மையை ஏற்க முன் வந்ததால், அவன் மனம் மாறி தாயார், தந்தையை அறிய முடிந்தது.* **Pride and Prejudice**-ஐ நாவல் என நாம் அறிகிறோம். உலகில் அறிவு பகுத்தறிவாக வளர்ந்து ஓரிருவரில், அதுவும் ஒரு பெண்ணில் அழகான காதலன் விஷயத்தில் அது செயல்படுவது, இந்த நாவல் **an epoch making piece of literature** சமூகம் மனவளர்ச்சி பெற்றதை சுட்டிக் காட்டும் இலக்கியமாகத் திகழ்கிறது என்று கூறலாம். குழந்தை வளர்ப்பிலும், கல்வி முறையிலும் விஞ்ஞானம் உலகுக்கு அளித்தவை ஏராளம். ஆனால்

விஞ்ஞானத்தால் அளிக்க முடியாத அம்சங்கள் பல உள்ளன. இது மனித சுபாவத்தைப் பற்றிய உண்மைகள். விஞ்ஞானம் இத்துறைக்கு வரவேயில்லை.

*தவறு செய்பவனை மக்கள் தலைவனாகப் பெறுவது அதிசயம். அவன் செய்த தவற்றை அதிகமாகச் செய்யும் பொழுது அவனை மேலும் பாராட்டி அமோகமாக ஆதரிக்கும் சுபாவத்தைப் பற்றி விஞ்ஞானம் நினைக்கவேயில்லை.* ஆன்மிகம் அதை அஞ்ஞான ருசியெனக் கூறுகிறது. ஆச்சரியத்தை எழுப்பும் வீரச்செயலுக்கு **(Surprise and Adventure)** அஞ்ஞானம் அரங்கமாக இருப்பதால், ஆத்மா அவற்றை நாடியது என பகவான் கூறுகிறார். கொடுமை *செய்தவரை விட்டகன்று வாழ்வில் பெரும் அளவுக்கு உயர்ந்தவன் அதே கொடுமையை அதே உறவினர்களிடம் தொடர்ந்து அதிகமாகப் பெற முயல்வது மனித சுபாவம்.*

எட்மண்ட் டாண்டே ஜெயிலை விட்டு வந்து, மெர்சடஸ் பெர்ணான்டை மணந்து பிரபுத்துவ வாழ்வை நடத்துவதைக் கேட்டு வெலவெலத்து விட்டான். அவள் தெளிவானவள், சிறந்தவள், உன்னதமான குணம் படைத்தவள், உயர்ந்த நடையுடைபாவனையுடையவள். *இயல்பாக மகாராணி போன்ற சுபாவம் உடையவள்.* அவள் மனம் பெர்ணான்ட் போன்ற அயோக்கியனால் புண்படவில்லை. டாண்டேக்கு கணவன் செய்த துரோகத்தைக் கேட்டு அவனுடைய பெரும் பணத்தை 1.3 மில்லியன் பிரான்க்கை தொட மறுத்தவள் புனிதவதி. பெண்மையின் அவ்வுயர்ந்த மனமும் கணவனின் துரோக மனப்பான்மையால் கசந்து புண்படவில்லை என்பது பெண்ணின் சுபாவம். டாண்டே வெள்ளை மனமுடைய திண்மையான தூய இளைஞன். அவன் திறனும் திண்மையும், தூய்மையும் நாடியது பெண்ணின் பிரியம் என அவன் தீர்க்கமாக நம்பினான். *அவன் நாடியது உச்சகட்ட அறிவு, அதற்குரிய அந்தஸ்து. அதைத் தன் தகுதியால் பெறும் பெண் அரேபியாவில் பிறந்திருப்பதை அவன் அறியவில்லை.* அவன் மனத்தூய்மைக்கு உரியவள் தூய்மையின் பிழம்பான அரசகுமாரி என அவனுக்குத் தெரியவில்லை. இவை ஆன்மிக விளக்கங்கள்.



விஞ்ஞானத்திற்கு மனித சுபாவமும், இலக்கியமும், வரலாறும் இன்று விலக்கு. இவை விஞ்ஞானத்துள் வந்தால் துறை வளம் பெறும். ஆழ்ந்து முதிர்ந்து அகன்று உயரும். ஞானம் முழுமையடையும். இன்றைய மனநிலையில் விஞ்ஞானி விஞ்ஞானத்தை டெக்னாலஜியாகக் கருதும் நிலை உருவாகி வேரூன்றும் பக்குவத்தை நாடுகிறது. விஞ்ஞானம் *பகுத்தறிவைக் கேலி செய்து மூட நம்பிக்கையின் மகுடமாகப் பெருமைப்படுகிறது.*

## ஜீவிய மணி

*உதவி பழைய கருத்து, தீட்சை பழைய மரபு. உதவியை அன்னை தீட்சையாகப் பெற்றால் பெற்றவர் ஜீவன் பிரபஞ்ச ஜீவனாகும். அன்னையின் அருளுக்குக் கருவியாக இருந்தவர் பிரபஞ்சமாகிறார். அன்னை பக்தி எண்ணத்தை நல்லெண்ண-மாக்கும். மனிதனுக்குப் பொதுவாக நல்லெண்ணமிருப்-பதில்லை என்பது மனித சுபாவத்தை அறிந்தவர் கூறுவது. எண்ணம் என்பதே கெட்ட எண்ணம் என்பது அன்னை கூறுவது. நல்லெண்ணமுள்ளவரும் உண்டு. அவருக்கு உதவிசெய்யும் வாய்ப்பு நல்லெண்ணத்திற்குச் சேவை செய்யும் வாய்ப்பாகும். அந்தச் சேவை பிரபஞ்ச லோகத்திற்குரியது. கிருஷ்ண பரமாத்மா சாப்பிட்ட ஒரு பருக்கை அனைத்து அதிதிகளின் பசியைப் போக்கியது. நல்லெண்ணமுள்ளவர்க்கு சேவை செய்யும் வாய்ப்பு கிடைப்பதே அருள். அவர் மனம் உவந்து பெற்ற ஒரு மணி அரிசி கொடுத்தவர்க்கு ஒரு மூட்டை அரிசியைப் பெற்றுத்தரும். நடைமுறையில் பல மூட்டை அரிசி விளையும் பல ஏக்கர் நிலம் வரும். வியாபார உலகில் இந்த அம்சம் செயல்படுவதைக் காணலாம். ஒரு பிரபலம் பெற்றவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து அவர் பெயரை விளம்பரத்திற்கு ஏற்றவர் பல ஆயிரம்கோடி பெறுகிறார்.*

**பழையதும் புதியதும் இணையும் ஆன்மிக சட்டமிது.**

# நிதானம்

கர்மயோகி

சமர்ப்பணம் நிலைத்து யோகம் செய்யும் திறன் வந்த பிறகு நிதானம் உருவாகி சமர்ப்பணத்தின் பயனைச் சீரமைத்து யோக அஸ்திவாரம் எழுப்ப வேண்டும். ஒரு சாதாரண அமெரிக்கருக்குக் காலமான உறவினர் $20 மில்லியன் உயிலில் அளித்தார். பணம் வந்தபின் பலரும் அவரை நாடினர். அவருக்குப் படிப்பில்லை. பண்பான பக்குவமில்லை. பணமிருப்பதால் அவர் குறைகளை எவரும் பொருட்படுத்துவதில்லை. மாடியிலிருந்து இறங்க வந்தால் அவருக்குக் கைப்பிடி மீது உட்கார்ந்து சிறு குழந்தை போல் வழுக்கும் பழக்கம் உண்டு. பலர் வந்து பேசும்பொழுது **Fire Engine** மணியடித்துக் கொண்டு ரோடில் போனால் உடனே எழுந்து ஓடி அதை வேடிக்கை பார்ப்பார். பணம் வந்துவிட்டது. பக்குவமில்லை. நிதானம் அவசியம் எனப் பலரும் கூறினர். 25 வயது இளைஞனை அவருடைய பேராசிரியர் கண்டு வியந்து நான் காணும் வயதானவர்கட்கில்லாத நிதானம் உங்களிடம் காணப்படுகிறது. இது எப்படியெனப் புரியவில்லை என்றார். பையன் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். மூன்றாம் தலைமுறை நான்காம் தலைமுறையில் அவன் வீட்டிற்குப் பெரிய வீடு எனப் பெயர். எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசுவேன், வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனக்கு, வம்பு சண்டைக்குப் போக மாட்டேன், வந்த சண்டையை விட மாட்டேன் என்பன அவர்களிடமிருந்து வராது, அவனால் எவருடனும் சண்டை போட முடியாது. பிறரிடம் குற்றம் காண முடியாது. பயம் அவனறியாதது, அவசரம் அவனுக்கில்லை, இது போன்றவை எளிய நல்லவர் பெற்ற குணங்கள். அதுவும் ஒரு வகை நிதானம். யோகத்திற்குரிய நிதானமும் நிதானமே, ஆனால் உயர்ந்தது. தொடர்ந்து வளர்வது. இனிமை உள்ளிருந்து எழுவது. அவர் செய்யும் காரியம் தவறுவதில்லை. அவரை அனைவரும் விரும்புவர். அவருள்ள இடத்தில் சூடு, போட்டி, பொறாமை, கடுகடுப்பு இருக்காது. நிதானம் போல் உயர்ந்தவை பல. அறிவு, ஞானம், விழிப்பு, உஷார், ஆனந்தம், சத்தியம்,



தெம்பு, திறமை, பொறுமை, மௌனம், சாந்தி எனப் பல்வேறு உயர்ந்த குணங்களுண்டு. மனிதனிடம் இவையிருந்தால் வளரும். வளர்ச்சி ஒரு கட்டத்தில் தடைபடும். அது உலக இயல்பு. எப்படி அறிவு உருவாகிறது, வளர்கிறது, ஏன் சிலரிடம் அது காணப்படுகிறது பிறரிடமில்லையென சிந்தனை செய்து, கவனித்து, ஆராய்ச்சி செய்வது தத்துவம். அது போன்ற ஆராய்ச்சிக்கு நிதானத்தை இங்கு எடுத்துக் கொண்டேன். பத்து அடுக்கு மாடி கட்டடம் எனில் அஸ்திவாரம் ஆழமாகப் பலமாக இருக்கும். நிதானம் பல பத்து மாடிக் கட்டடம் போல். அதன் அஸ்திவாரம் உடல், அதன் தெம்பு உயிர். உடல் வலிமை அபரிமிதமாகி அசைய மறுக்கும் நிலை நிதானத்திற்குரியது. உயிர் தெம்பு தருவது. தெம்பு அதிகமானால் உட்கார முடியாது. துருதுரு என இருக்கும். தெம்பு அபரிமிதமாகி அளவுகடந்து வளர்ந்தபடியிருப்பதை உடல் கிரகித்து ஆட்டம் அசைவு இல்லாமலிருப்பது நிதானம் உருவாக உதவும். புதியதாக அறிவதைப் பலரிடமும் கூறுவது வழக்கம். அது மனத்தை நிரப்பி வாய் வழியே வழியும். நிரம்பியது வழிவதைக் கடந்து மனத்தால் அறிவு கிரகிக்கப்பட்டு மனம் அசைவிழந்து மௌனத்தை நாடுவது நிதானம் பெறும் தகுதி. தேவன் "கோமதியின் காதலன்" என்ற நாவலில் நாயகன் ரங்கராஜன் நாயகி கோமதியைக் கண்டதைக் கூறும்பொழுது ஒரு பெண்ணைப் பார்த்தால் இவனுக்கு மீண்டும் பார்க்கத் தோன்றுவதில்லை. கோமதியைக் கண்டபின் மீண்டும் அவளைப் பார்க்க நினைக்கிறான். கன்னியிடம் இதயத்தைப் பறி கொடுத்தவனுக்கு இதயத்தில் நிதானமிருக்காது. தெய்வ தரிசனம் கிட்டும் எனத் தோன்றியபின் பக்தனுக்கு இதயம் நிதானத்தை இழந்து விடும். இலட்சம் பிறவியில் மோட்சம் கிடைக்கும் என்றறிந்த ஞானி சோகமானான். அதையே கேட்ட பக்தன் பரவசமாகி நடனமாடியதால் மோட்சம் உடனே கிடைத்தது.

புத்தியைக் கூர்மைப்படுத்தினால் அறிவு வளரும். உடலுக்குப் பயிற்சி கொடுத்தால் உடல் வளரும். நிதானம் வளர என்ன செய்ய வேண்டும். நெஞ்சில் ஆசை எழுந்தால் நெஞ்சுக்கு

நிலையிருக்காது. ஆசையை மனம் ஏற்றால் அது அலைமோதும். ஆசை வேறு, மனம் வேறு. ஆசையிருந்தாலும் இல்லா-விட்டாலும் மனம் ஆசையைப் பாராட்டாவிட்டால் நிதானம் குலையாது. ஆசையைக் கண்டு அது சிறுபிள்ளைத்தனம் என அறிந்து அகற்ற முனைவது நிதானம் எழ உதவும். சாந்தி என்பது அமைதி. அதற்குரிய இருப்பிடம் ஆத்மா. அமைதியற்ற ஆன்மா நிலைகுலைந்து விடும். அவரைக் கண்டவர் உடனே அவர் நிலையை அறிவார். அறிவாலோ, முயற்சியாலோ அமைதியைப் பெற முடியாது. தெய்வ நம்பிக்கை அமைதியை அனுமதிக்கும். அமைதி சிறந்து சாந்தி பிறக்கும். சாந்தி சுகம் பெற வழி செய்யும். ஆத்மா மகிழ்ந்து வாய் விட்டுச் சிரிப்பது **glad laughter of the soul.** நான்கு கட்டங்களை சமஸ்கிருத சொற்களால் கூறிய பகவான் அடுத்த கட்டத்தை ஆங்கிலத்தில் எழுதுகிறார். சமதா, சாந்தி, சுகம் என்பவை முதல் மூன்று. ஆத்மாவின் சிரிப்பு பூரண யோகத்திற்கே உரியது. அதற்குரிய சமஸ்கிருத சொல்லில்லை. நிதானத்தை அறிவு, உணர்வு, அமைதி மூலம் மூலத்திலிருந்து சிந்தனை செய்தால் நிதானம் மேலும் மேலும் விளங்கும். விளங்குவதன் விபரம் சிந்திப்பது. திறமை பெற்ற ஓவியர் முதலில் நிதானமாக இருக்க முடியாது. தேர்ச்சி பெற்ற ஓவியர் வரையும்பொழுது அவர் சூழலே நிதானம் பெறும். அறிவு, தெம்பு, திறமை மூலம் நிதானத்தை ஆராய மூலத்தை-யடைந்து அங்கு ஆரம்பிக்க வேண்டும். ஓடுபவனுக்கு ஓடும்-பொழுது நிதானம் தேவை. மேடைப்பேச்சாளர் கூட்டத்தைத் தட்டி ஆரவாரம் அடிக்கடி செய்யும்பொழுது உற்சாகம் பெறும் வெற்றியில் நிதானம் வேண்டும். கயிறு மேல் நடப்பவர்க்கு உடலில் நிதானம் தேவை. சிங்கத்தைக் கட்டி ஆள்பவனுக்கு அதனருகில் உள்ளபொழுது நிதானம் தேவை. பாரதி மிருகக்-காட்சி சாலையில் சிங்கத்தை அணுகி தடவிக் கொடுத்து "மிருக ராஜாவே கவி அரசனுக்கு ஓர் கர்ஜனை கொடு" என்றார். சிங்கம் கர்ஜித்தது. எவரும் கேட்காத பணத்தைத் திருப்பித் தர முடிவு செய்த **Mr.**பென்னட் பெற்ற நிதானம் உயர்ந்த பண்பு செயல்பட எடுக்கும் முடிவின் நிதானமாகும். அது சமூகத்தைக் கடந்த சக்தி. அதைச் செய்பவருக்கு மனைவியின் ஆர்ப்பாட்டத்தின்



முன் நிதானமாக இருக்க முடியவில்லை. நிதானம் பெரியது, பல நிலைகளில் உள்ளது, பலவகையானது. நமக்குரியது யோக நிதானம். யோகம் என்பது அன்பர்கட்குப் பூரண யோகம். தான் விரும்பும் ஒருத்தி தன்னை விரும்புகிறாள் என்ற நேரம் ஆத்மா நெஞ்சில் மலர்ந்து நிறையும் நேரம். நிதானம் க்ஷணமிருக்காது. இதுவரை உலகில் என் போல் அன்பு செலுத்தியவரில்லை எனக் கூறத் தவறுவதில்லை. ஆறு மாதம் கழித்து அப்படிச் சொல்லும் அளவுக்கு நான் நிதானமிழந்தேன் எனப் புரியும். ஒருவர் பிறந்த ஊர் எது என்பதை அவர் உச்சரிப்பினின்று அறியலாம். ஆங்கிலத்தில் உயிரெழுத்து ஐந்து. நமக்கெல்லாம் ஒரு எழுத்தை எப்படி உச்சரிக்கிறோம் எனத் தெரியும் **Phonetics** உச்சரிக்கும் கலையை அறிந்தவர் ஐந்து உயிரெழுத்துகளை இருபத்து மூன்று வகையாக மக்கள் உச்சரிப்பதை அறிவார். அதனால் அவருக்கு **Phonetic expert** வல்லுனர் எனப் பெயர். அவரை வந்து சந்தித்த புரொபஸர் உயிரெழுத்துகளை நூற்று ஐம்பத்தி மூன்று வகையாக உச்சரிப்பதை அறிவார். அவரால் ஒருவர் பேச்சைக் கேட்டு பிறந்த இடம், படித்த இடம், தொழில் செய்த இடம், போய்ப் பார்த்த நாடுகளைக் கூற முடியும். குப்பையில் கிடந்த படிக்காத கன்னியை அவரால் ஆறு மாதத்தில் பெரும் சீமாட்டி போல் பேச வைக்க முடிந்தது. நிதானத்தின் மூலம் எனர்ஜி, வளர்ச்சி, ரூபம், பரிணாமம் ஆகியவற்றை நாம் அந்த அளவுக்குப் பயில முடியும்.

மனம், ஆத்மா, ஜீவன், உயிர், உடல் ஆகியவற்றிற்குரிய நிதானம் வேறுபடும். அதை அறிய இவற்றுக்குரிய வேறு-பாட்டை அறிய வேண்டும். நினைவு, சிந்தனை ஆகியவை மனத்தின் பகுதிகள். நெஞ்சமும் ஒரு வகையில் மனத்தின் பகுதி. நெஞ்சு மனத்திலிருந்து வேறுபட்டது, மனத்திற்கு முன் உருவானது என்றாலும் மனத்திற்கும் நெஞ்சுண்டு. நெஞ்சுக்கும் மனம் உண்டு. நினைவு தெரிந்தது மனத்திலிருப்பது. சிந்தனை தெரிந்த பல விஷயங்கள் மூலம் மனம் அறிவு பெறுகிறது. கற்பனை இவற்றினின்று வேறுபட்டது. தீர்மானம், உறுதி ஆகியவை வேறு. மனத்தின் இருப்பிடம் மூளை. மூளையில் மனம் செயல்படுவதால் விஞ்ஞானம் மூளை மனத்தைச்

சிருஷ்டித்தது என்கிறது. மோட்டார் இயங்க கரண்ட் வெளியிலிருந்து வர வேண்டும். கரண்ட் செயல்பட மோட்டார் கண்டுபிடிக்கப்பட்டது. மனம் மனிதனில் செயல்பட மூளையை இயற்கை சிருஷ்டித்தது என்கிறார் பகவான். கைகால்களில் விரல்கள் உள. கால், கை விரல்களற்றதாக நெடுநாள் முன்னிருந்ததாகக் கூறுகிறார்கள். நடக்கும்பொழுது பிடிப்பு ஏற்பட பாதம் முகப்பில் விரல்களாகப் பிரிந்தது. வேலை செய்வதால் அதற்கேற்ப கையில் விரல்கள் ஏற்பட்டன. கலைஞர்கள் கைவிரல்கள் மென்மையாக, நீளமாக இருக்கும். மனம் என்பது ஜீவனின் பகுதி. முதன்மையான பகுதி. இதன் கருவிகள் சிந்தனை, நினைவு. உயிர் என்பது (vital) நெஞ்சு உறையுமிடம். உடல் அதற்கும் கீழுள்ளது. ஆத்மா ஜனித்தல் எனில் ஆத்மா ஓர் உடலை ஏற்று அதனுள் உயிரையும், மனத்தையும் கோடிக்கணக்கான வருஷங்களாக உற்பத்தி செய்கிறது. மனம், நெஞ்சு, உடல், ஆத்மா அனைத்தும் சேர்ந்தது ஜீவன். ஆத்மா ஜீவனின் பகுதி. ஆனால் ஜீவனுக்குரிய ஆத்மாவும் உண்டு. அது ஜீவாத்மாவாகும். மரபு ஒவ்வொருவருக்கும் ஒரு ஜீவாத்மா உண்டு எனக் கூறுகிறது. சிருஷ்டிக்குரியது ஒரே ஜீவாத்மா. அது இன்னும் சிருஷ்டியில் பிறக்கவில்லை. அனைவரும் தனித்தனியாகப் பெற்ற ஆத்மா அந்த ஒரே ஜீவாத்மாவின் பிரதிபிம்பங்களே என்று பகவான் கூறுகிறார். நிதானம் இவையனைத்துக்கும் உண்டு. மனத்திற்கு நிதானம் உடலின் நிதானத்திலிருந்து வேறுபடும். நினைவுக்குரிய நிதானம் சிந்தனைக்குரிய நிதானத்தினின்று வேறுபட்டது. ஒவ்வொரு நிலைக்கும் அம்சத்திற்குரிய நிதானத்தை விவரமாக அறிந்து நம் அனுபவத்தால் அதை அறிவது நூறு அல்லது இருநூறு நிலைகளில் நிதானம் புலப்பட உதவும். ஒரு கம்பெனி வளர ஆரம்பித்தபொழுது இரண்டரை கோடி முதல் தேவைப்பட்டது. சொத்தில்லாததால் பணம் புரளவில்லை. சொத்துக்குரிய கடன் பத்து இலட்சம் பெறும். அவர் சரக்கு பிரபலமாய் விட்டதால் மக்களிடம் ஷேர் வசூல் செய்ததில் அவருக்கு இருபது கோடி முதல் திரண்டது. சொத்துக்குரிய கடன் பத்து இலட்சம். வியாபாரத்திற்குரிய கடன் இருபது



கோடி. சொத்திற்குரிய நிதானம் பெறுவதும் மார்க்கெட்டிற்குரிய நிதானம் பெறுவதும் இருபது மடங்கு. அப்படியானால் நிதானம் என்றால் என்ன? சொத்தைப் பெறுவதால் பெருமையை உணர்ந்தால் நிதானமிருக்காது. பெருமைப்படாமல், ஆர்ப்பாட்டம் செய்யாமலிருந்தால் பெருமிதம் ஏற்படும். சொத்திற்குரிய நிதானம் உள்ளவர்க்கே மார்க்கெட் நிலைப்படும். மார்க்கட்டிற்குரிய நிதானமுள்ளவர்க்கு மார்க்கெட் இலாபம் தருவதுடன் முதலும் தரும். நிதானம் இங்கெல்லாம் எழவில்லை என்றாலும் அறிவில் நிதானம் புதைந்திருப்பதையும் அது செல்வம் தரும் என்பதையும் காணலாம்.

சத்தியம், உண்மை, நிதானத்தின் அடிப்படை. பொய் சொல்பவர் பலவிதம். அவருள் இருதரப்பினர் உண்டு. 1) ஆனந்தமாக பரவசப்பட்டு பொய்யைப் புனைந்து கூறுவதில் ஆத்ம திருப்தியடைபவர், 2) ஒரு பொய்யும் வாயால் கூற மறுக்கும் கட்டுப்பாட்டை ஏற்று பொய்யின் புனித உருவம் ஆழத்தில் ஜகஜ்ஜோதியாய் உருவாகி வாயால் சொல்லும் மெய்யெல்லாம் முடிவில் பொய்க்கச் செய்வது. முதல் தரப்பார் அவர்களே விரும்பி முடிவு செய்தால் மனிதகுல மாணிக்கமாவார். இரண்டாம் தரத்தார் உடலே அழிந்தாலும் பொய்யை எளிதில் கைவிட முன்வர மாட்டார். நமக்கு அவர்களைப் பற்றித் தெரிவதால் சத்தியத்தின் வேகம் விளங்கும். சத்தியம் சத்தியமாக ஜெயிக்கும். ஜெயத்தை நாடாவிட்டாலும் சத்தியம் ஜெயிக்கும். சத்தியத்தை உள்ளும் புறமும் மேற்கொண்டாலும் அறியாமை அதனுடன் செயல்படும். சத்தியமான மனிதனின் அறியாமையால் செயல்பட்டு செயல் அறியாமையை அழித்து அறிவாகத் திருவுருமாற்றி சத்தியம் ஜெயிக்க வழிவகுப்பதைக் காண்பவருக்குச் சமர்ப்பணம் மேலும் தெளிவாக விளங்கும். அறியாமைக்கு நிதானம் உண்டு. அறிவுக்கும் நிதானம் உண்டு. பொய்க்கும் நிதானம் உண்டு. மெய்க்கும் நிதானமுண்டு. பொய் மெய் அறிவு அறியாமை எவ்வகையாகக் கலந்தாலும் அதற்கும் நிதானமுண்டு.

(தொடரும்)

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

அன்னையை வழிபட நேர்ந்ததே அதிர்ஷ்டம் என்பதில் ஐயம் இல்லை. அன்னையைக் கேட்டு அதிர்ஷ்டத்தைப் பெறுதல் அதனினும் சிறப்பு. **(Mother's Luck)** அன்னையின் அதிர்ஷ்டம் என்பது ஒன்று உண்டு. அதிர்ஷ்டம் என்பதை விளக்கத் தேவையில்லை. ஒருவன் வாழ்வில் ஓர் அம்சத்தால் அதிர்ஷ்டம் வந்துவிட்டால் அவன் நடுத்தெருவிலிருந்து நாட்டின் நடுவுக்குச் சிறப்புற உயர்ந்து விடுகிறான். அன்னையின் அதிர்ஷ்டம் என்பது மனிதனுடைய எல்லா அம்சங்களையும் அதிர்ஷ்டமுடையதாகச் செய்வதாகும். அதன் தன்மை சிறப்புடையது. நாளுக்கு நாள் வளரும் தன்மை-யுடையது. இதுவரை இல்லாததை உற்பத்தி செய்து முதலில் நமக்கு அளிக்கக்கூடியது. அதைப் பெற நாம் செய்ய வேண்டியது பிரார்த்தனைதான். பிரார்த்தனைக்குரிய நிபந்த-னைகளைச் சொல்வது எளிது; கடைப்பிடிப்பது எளிதன்று. மலர்ந்த மனம், சந்தோஷம் பொங்கும் நெஞ்சம், காண்பவ-ரெல்லோரையும் கடவுளாகக் கருதும் மனப்பான்மை, சிறிய புத்தியே அறியாத பெருந்தன்மை, குறையால் நிரம்பியவன் வாழ்வில் உள்ள நிறைவின் வித்துகளைக் கண்டு அவற்றை வளர்க்கப் பாடுபடும் இலட்சியம், மற்றவர்கள் வெற்றியால் மனம் துள்ளும் இயல்பு போன்ற நல்ல குணங்களால் மட்டுமான சுபாவம் அன்னையின் அதிர்ஷ்டத்தைப் பெறத் தகுதியுடையது. இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யக்கூடியவர்கள் அன்னை-யின் அதிர்ஷ்டத்தையும் கேட்டுப் பிரார்த்திக்கலாம்.

*முடிவான பலன் முதலில் கிடைக்கும்:*

முடிவான பலனை முதலில் கொடுக்கும் திறன் அன்னைக்கு உரியது. அன்னையின் அன்பர்கள் தங்கள் தொழிலில் அடிக்கடி இதைப் பார்ப்பதுண்டு. கேவல்கோ என்ற தொழில் அதிபர் ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டு அதிலிருந்து தப்பிக்க அன்பர்



ஒருவரை நாடினார். அன்பருக்குக் கேவல்கோவைப் பிரார்த்திக்கச் சொல்ல முடியாது. எனவே தொழிலைப் பற்றிய சில நுணுக்கங்களைச் சொல்லி, அவற்றைப் பின்பற்றினால், இவற்றால் 5, 6 கோடி வியாபாரம் பெருகும். அதன் வழியாகச் சிக்கல் தீரும் என்றார். சொல்லிய அன்பர் தம் இடம் வந்து அன்னைக்குப் பிரார்த்தனை செய்தார். இரண்டாம் நாள் கேவல்கோ அன்பரைக் கூப்பிட்டு தனக்கு 5, 6 கோடி வியாபாரம் இரண்டு நாளில் ஏற்பட்டதாகச் சொன்னார். ஒரு முறையைக் கைப்பிடித்து, முடிவாக வர வேண்டிய பலனை முதலிலேயே கொடுக்கும் திறனுடையது அன்னையின் அருள். நமக்கு அது வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்யலாம். அதற்குரிய நிபந்தனையை மட்டும் பூர்த்தி செய்ய வேண்டும்; முடிவான பலன் வர நாம் என்ன முயற்சி செய்ய வேண்டுமோ அம்முயற்சியைப் பிரியமாகச் செய்யும் அளவுக்கு மனம் இன்று பக்குவமடைய வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தா சர்வீஸ் முடிவில் டெபுடி கலெக்டராக ரிடையர் ஆவார் என்றால், இன்று அவருடைய மனநிலை டெபுடி கலெக்டருக்குரிய மனநிலையாக மாறுமேயானால், அந்த மனநிலைக்குரிய பதவியை அன்னை இன்றே அளித்து-விடுவார்.

முடிவான பலன் முதலிலேயே வேண்டும் என்று பிரார்த்தனை செய்பவர், முடிவான நிலையிலுள்ள மனப்-பக்குவத்தை இன்று பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

திறமை, சாமர்த்தியம், அனுபவம், நுணுக்கம், அரிய சந்தர்ப்பம், நல்ல குணம், உயர்ந்த மனப்பான்மை ஆகியவற்றை நாம் அனுபவத்தால் பெறுகிறோம். அனுபவத்தால் பெறும் எந்தத் திறமையையும், எந்த அம்சத்தையும் அன்னையிடமிருந்து பிரார்த்தனையால் பெறலாம். இருவர் ஒரு பெரிய பிரமோஷனுக்காகப் பரீட்சை எழுதினார்கள். இரண்டு பேரும் பாஸ் செய்தனர். இருவருக்கும் பிரமோஷன் கிடைத்தது. ஒருவர் மற்றவரைப் பார்த்து கேலியாக “நான் படித்து பாஸ் செய்தேன். ராமஜெயம் எழுதிப் பாஸ் பண்ணவில்லை”

என்றார். படித்து பாஸ் செய்வது அறிவின் முயற்சி. ராமஜெயம் எழுதி அதே பலன் பெறுவது ஆன்மிக முயற்சி. படித்தவர் ராமஜெயம் எழுதியிருந்தால், ராமஜெயம் எழுதலாமே தவிர, அது பாஸ் கொடுக்காது. அதற்கு ஒரு பக்குவம் தேவை. எத்தனையோ பேர் ராமஜெயம் எழுதுகிறார்கள். எல்லோருக்கும் அதே பலன் கிடைப்பதில்லை.

வெய்யிலின் கடுமை குறைய வேண்டும், மழை வேண்டும் என்று பிரார்த்தனை செய்து பலன் பெறுவதுண்டு.

பிரார்த்தனையின் இரகஸ்யம் நம்பிக்கை; அன்னையால் இதைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையே பிரார்த்தனையின் கரு.

*பிரார்த்தனையால் சாதிக்கக்கூடியவை:*

1. யோக சித்தி பெறுதல்.
2. நம் அறிவு நிலை, மனநிலை, செயல் நிலைகளை உயர்த்தி, உயர்ந்த சமூக நிலையை அடைதல் **(To raise your level of functioning and status).**
3. பிரச்சனைகளைத் தவிர்ப்பது.

முதல் இரண்டையும் கருதாமல் மூன்றாவதாகப் பிரச்சனையைத் தீர்த்தலை மட்டும் இக்கட்டுரையில் எழுதுகிறேன். உடல் நலம், புத்திசாலித்தனம், தோற்றப் பொலிவான அழகு, அந்தஸ்து, சந்தோஷம், அதிர்ஷ்டம் ஆகியவற்றைப் பிரார்த்தனையால் பெறலாம். நாமறிந்த வாழ்க்கையில் இவையெல்லாம் நடக்காது என அறிவோம். அன்னை வாழ்வில் அத்தனையும் நடக்கும் என்பதைப் பிரார்த்தனை நமக்கு அறிவுறுத்தும்.

*தொலைந்த பொருட்கள்:*

தொலைந்த பொருட்களைத் தேடும்போது அவை கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை சிலருக்கு உடனே பலிக்கும்; பலருக்குப் பலிப்பதில்லை. தன் வீட்டில் 1 1/2 இலட்சம் பெறுமான நகை களவு போனதை ஊரிருந்து திரும்பி வந்து பார்த்தவர், போலீஸுக்குப் புகார் கொடுப்பதன்முன் ஆசிரமத்திற்குச் செய்தியனுப்பி, பிரார்த்தனை செய்தார். 3-ஆம்



நாள் வேறோர் ஊர் போலீசாரிடம் அது தற்செயலாக முழுவதுமாகக் கிடைத்தது, இவருக்குச் செய்தி வந்தது.

பொருள் தொலைந்தபின் மனம் பதட்டமாக இருக்கும். இந்த நிலையில் செய்யும் பிரார்த்தனை பதட்டத்தைக் குறைக்குமே தவிர, அன்னையின் காதில் போய் விழாது. மனத்தைத் திடம் செய்து கொண்டு, அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு, மனம் பதட்டம் அடங்கும்வரை காத்திருக்க வேண்டும். அதன்பின் போய்த் தேடினால் உடனே கிடைக்கும்.

*தலைவலி போன்ற வியாதிகள்:*

வியாதி ஏற்பட்டபின் பிரார்த்தனை செய்தால் பத்தில் ஒன்பது குணமாய்விடும். ஏதோ காரணத்தால் ஒன்று பிரார்த்தனைக்கு அசையாது. அதுபோன்ற நிலையில் பிரார்த்தனைக்குமுன் அன்னையின் ஒளி தலை முழுவதும் நிரம்புவதுபோல் கற்பனை செய்தால் அது தலைவலி குணமாவதற்குப் பயன்படும். எந்த இடத்தில் வலி இருக்கின்றதோ அந்த இடம் அன்னையின் ஒளியால் அல்லது சாந்தியால் நிரம்புவதுபோல் கற்பனை செய்வது பிரார்த்தனைக்குத் துணையாகும்.

*கெட்ட கனவு:*

காலையில் எழுந்தவுடன் அன்றிரவு நல்ல தூக்கம் வேண்டும் என்று பிரார்த்தனை செய்து, மாலையில் குளித்து, சுத்தமான துணியை அணிந்து, இரவில் படுக்குமுன் கை, கால் கழுவி, வாயைக் கொப்பளித்துப் படுத்தால் கெட்ட கனவுகளை நம் பிரார்த்தனை விலக்க உதவும். நம்மைச் சுற்றி **(cocoon of peace)** அமைதியால் ஆன கூண்டு ஒன்றை கட்டிக்கொள்ளுதல் நல்லது என்று அன்னை கூறுகிறார்.

*வெளியூர் பிரயாணம்:*

கணவன் அடிக்கடி வெளியூர் சென்றால் பத்திரமாகத் திரும்பி வர வேண்டுமென மனைவி பயப்படுவாள். கணவன் போக வேண்டிய இடத்திற்கெல்லாம் மானசீகமாக அன்னையை

முதலிலேயே அழைத்துச் சென்று, பின்னர் பிரார்த்தனை செய்தால், மனப்பாரம் குறையும். அன்னையின் பாதுகாப்பு கணவருடன் இருக்கும்.

பிரார்த்தனை என்பது தெய்வம் மனிதனுக்கு அளித்த வரப்பிரசாதம். அதனால் பெற முடியாத வரம் ஒன்றில்லை. அதைப் பயன்படுத்தக்கூடிய திறனும், பயிற்சியும், மனநிலையும் உள்ள எவரும் பிரார்த்தனை மூலம் எதையும் பெற முடியும்.

*சிறப்பான பிரார்த்தனை:*

தினந்தோறும் பிரார்த்தனை செய்யும் நேரம் மாலையானால் அந்த நேரம் வருவதற்காக ஆர்வத்துடன் காத்திருந்து, பிரார்த்தனை செய்யும்பொழுது மனம் இனிமையாக இருந்து, அது முடிந்தவுடன் இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிட்டதே என்ற ஏக்கம் ஏற்பட்டால் நமக்குப் பிரார்த்தனைக்கு உரிய மனநிலை இருக்கிறது என்று பொருள். அதுவே பிரார்த்தனையின் சிறப்புக்குரிய அடையாளம்.

★★★

### *10. அமுதசுரபி*

அமிர்தத்தைத் தேடி பாற்கடலைக் கடைய, ஆரம்பத்தில் கிடைத்தது ஆலகாலம். அதுவே சிருஷ்டியின் அமைப்பும், சிறப்பும் ஆகும். வாழ்வின் இருபுறங்கள் ஒளியும், இருளும் ஆகும். அதைப் போன்றே ஆலகால விஷமும், அமிர்தமும் சிருஷ்டியின் இரு கோடிகள் ஆகும். சுவர்க்கத்தை நாடிப் போனால் வழியில் நரகம் வரும். நரகத்தைத் தாண்ட மறுப்பவர்கள் சுவர்க்கத்தை அடைய முடியாது என்பது பகவான் ஸ்ரீ அரவிந்தர் வாக்கு. ஆதிநாள் முதல் இன்றுவரை உள்ள நிலை இது. பூரணயோகம் மனித வாழ்க்கையைத் தெய்வீக வாழ்க்கையாக மாற்ற முயலும்பொழுது சிருஷ்டியின் அடிப்படையையே மாற்றிவிடுகிறது. சிருஷ்டியின் அஸ்திவாரம் ஆலகாலமென்றால், பூரண யோகம் ஆலகாலத்திலிருந்து ஆரம்பித்து அமிர்தத்தை நாடும் மனிதனுக்கு ஆலகாலத்தை



அமிர்தமாக மாற்றிக் கொடுக்கிறது. இதுவே பூரணயோகத்தின் இலட்சியம். இந்த யோகத்தை மேற்கொள்ளும் சாதகனைப் பூரணயோகம் அத்தகைய மாற்றத்தை அவனுள் ஏற்படுத்தக் கோருகிறது. சாதகன் தன்னுள் உறையும் ஆலகாலத்தைத் தன் ஆத்ம சக்தியினால் அமிர்தமாக மாற்ற வேண்டும். சாதகன் மனித குலத்தின் பிரதிநிதியானதால் அவனுள் ஏற்பட்ட மாற்றம் பின்னர் உலகத்தில் ஏற்பட வாய்ப்புண்டு.

பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் பூரண யோகத்தை மேற்கொண்டு சிருஷ்டியை முழுவதும் ஒளிமயமாக்க முயன்றனர். அவர்களை வணங்கும் பக்தர்களுக்கு அவர்கள் வழங்கும் பரிசு சிறப்பானது. எளிய மனிதன் தன் உள்ளுணர்வால் பவித்திரப்பட்டு, பக்தி மேலிட்டு, நேர்மையான வாழ்க்கையை மேற்கொண்டு, அன்னையை நாடி, அவர்களுடைய தெய்வப்பிறப்பின் சிறப்பை அறிந்து வழிபட ஆரம்பித்தால், அவனது வாழ்வை அன்னை அமுதசுரபியாக மாற்றிவிடுகிறார். அதாவது, ‘கொள்ளத்தான் குறையாது’, ‘தொட்டனைத்தூறும் மணற்கேணி’ என்பதற்கேற்ப வாழ்வின் வளங்கள் எடுக்க எடுக்க அபரிமிதமாக உற்பத்தியாகும். அமுதசுரபி எனும் வாழ்வை அவனுக்குப் பரிசாக அன்னை அளிக்கின்றார். இது பொதுவான பலன். வாழ்வில் சிறப்பான மனிதர்கள் உண்டு. அவரைப் பார்த்தால் ‘கையெடுத்துக் கும்பிடத் தோன்றும்’, ‘சாந்தமே உரு ஆனவர்’, ‘எதிரியும் வாழ நினைப்பவர்’, ‘எதற்கும் கலங்காதவர்’, ‘அவரைப் பார்த்தபின் அவரிடம் பொய் சொல்ல வாய் எழவில்லை’, ‘உத்தமமான மனிதர்’, ‘நடமாடும் தெய்வம்’ என்பன போன்ற எண்ணங்கள் எழும் பல வகையான சிறப்பான மனிதர்கள் உண்டு. இவர்கள் அன்னையை ஏற்றுக்கொண்டால் அன்னை அவர்களுக்குப் பரிசளிப்பதில்லை. வாழ்க்கைக்குப் பரிசாக அவர்களை அன்னை அளிக்கின்றார். அத்தன்மையான மனிதர்கள் அன்னையை ஏற்றுக் கொண்டால், அவர்கள் தங்கள் ஆத்மாவில் அன்னையைப் பிரதிஷ்டை செய்துவிடுகின்றார்கள். அதன்பின் தங்கள் வாழ்க்கையை அன்னை வாழ்க்கையாக மாற்றி, வாழ்க்கையில் தங்கள் திறனை வெளிப்படுத்த முயலாமல் அன்னையை வெளிப்படுத்த ஆர்வமாகச்

செயல்படுகின்றார்கள். சாதாரண மனிதனுக்கு வாழ்க்கையை அமுதசுரபியாக மாற்றிக் கொடுக்கும் அன்னை சிறப்பான மனிதனுக்குக் கொடுப்பது வேறு. அவனையே அமுதசுரபியாக மாற்றி வாழ்க்கையை அவன் மூலம் வளப்படுத்துகிறார் அன்னை. மனித வாழ்வை தெய்வீக வாழ்வாக மாற்றும் கருவியாக அவனை அன்னை மாற்றி, ஏற்றுக் கொள்கிறார்.

எடுக்க எடுக்கக் குறையும் என்ற நியதியை நாம் அறிவோம். எடுக்க எடுக்கக் குறையாது என்று புராணங்களில் கேட்டிருக்கிறோம். அப்படி ஒரு நிலை இருக்க முடியுமா? எடுக்க எடுக்க வளரும் நிலை உண்டா? வாழ்க்கையில் அத்தகைய நிகழ்ச்சிகளை நாம் காண முடியுமா? முடியும் என்றால் எப்படி அந்த நிலை ஏற்பட்டது? எங்கிருந்து மேலும் சுரந்து வருகின்றது?

கிணற்றிலுள்ள நீரை இறைத்தால் நீர்மட்டம் குறையும். இறைப்பதை நிறுத்தினால் ஊற்றுக் கிளம்பி நீர் மட்டத்தை பழைய நிலைக்குக் கொண்டுவரும். கிணறு உள்ள இடம் ஏரிக்குச் சற்று தூரத்தில் அமைந்திருந்தால், கிணற்று நீரை இறைக்கும்பொழுது பூமியில் ஊற்று கிளம்பி மீண்டும் மீண்டும் கிணற்றை நிரப்பும் சமயத்தில் கிணற்றின் ஊற்றுக்கும், ஏரியில் உள்ள நீரூற்றுக்கும் தொடர்பு ஏற்படுமேயானால் கிணற்றின் நிலை வேறு. இறைக்க இறைக்க நீர் மட்டம் குறைவதற்குப் பதிலாக உயர்வதைக் பார்க்கலாம். ஏரியின் ஊற்றுநீர் கிணற்றடியில் உள்ள ஊற்றோடு தொடர்பு கொண்டுவிட்டதால் கிணற்றுக்கு ஏரியிலிருந்து நீர் வர ஆரம்பிக்கும். கிணற்று நீரை இறைக்காவிடில், அடி ஊற்றுகள் சிறியதாகவே இருக்கும். கிணற்று நீரை இறைத்தால், அடி ஊற்றுகள் ‘கண்’ பெரியதாகி அதிக நீரைக் கொடுத்து, நீர் மட்டத்தை உயர்த்தும்.

சிறிய ஊற்றான கிணறு, பெரிய ஊற்றான ஏரியுடன் தொடர்பு கொண்டதால் ஏற்பட்ட விளைவு, கிணற்றை அமுதசுரபியாக்குகிறது. எந்தச் சிறிய செயலும், பெரிய நிலைகளுடன் தொடர்புகொண்டவுடன், வற்றாத வளம் கொண்டதாக மாறும். அதுவே அமுதசுரபியின் அடிப்படை. ‘தொட்டனைத் தூறும் மணற்கேணி’ என்பதில் உள்ளது இந்தத் தத்துவமே. ‘பயில்



தோறும் நூல் நயம் போல்’ என்பதிலும் இதே அடிப்படை செயல்படுகிறது. நூல் என்பதில் எளிமையானது செய்தி; செய்தியை வெளிப்படுத்துவது கருத்து; கருத்துக்கு அடிப்படை இலட்சியம்; இவற்றை இணைப்பது இலக்கியம். இலக்கியத்தைச் சிறப்புறச் செய்வது இலக்கணம். மாணவன் முதலில் செய்தியை அறிகிறான். ஊன்றிப் படித்து, கருத்தை உணர்கிறான். இலட்சியத்தைப் புரிந்துகொண்டபொழுது அவனுக்கு வியப்பு ஏற்படுகிறது. மேலும் இலக்கண, இலக்கிய சிறப்புகள் நயம்பட வெளிப்படுகின்றன. அடுக்கடுக்காக உயர்ந்த கட்டங்கள் பின்னணியில் இருப்பதால் நூலைப் பயில்தொறும் நயம் மிகுந்து காணப்படுகிறது.

சொல்லும், செய்தியும் சிறிய ஊற்றானால், கருத்தும், இலட்சியமும் பெரிய ஊற்றாகி, பயில்தொறும் நயத்தை இடையறாது வழங்குகிறது. மிகச் சிறிய அளவில் வாழ்வில் இத்தகைய நிலையை நாம் காணலாம். பொதுவாக அன்னையிடம் வரும் அன்பர்களை வளப்படுத்த அன்னை கையாளும் முறைகளில் இது ஒன்று. வாழ்வில் எந்தப் பகுதியில் ஊற்றுக்குப்பின் பேரூற்றுள்ளதோ அங்கு அன்னை அன்பர்களை அழைத்துச் செல்வார். பின்னர் தொட்டதெல்லாம் பலிக்கும்; எதிர்பாராத அளவில் பலிக்கும். ‘இப்படியெல்லாம் சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதையே நானறியேன்’ என்றவர் பலர். அகில இந்திய ஸ்தாபனத்தின் தலைவர் ஒருவர் அன்னை பக்தர். மற்றொரு பக்தருடைய திட்டத்தில் சிறு அளவு பங்கு கொண்டார். சிறிய திட்டம் வெற்றி கண்டது. அடுத்த கட்டத்திற்குப் போகலாம் என்றார்கள்; போனார்கள். எல்லோரும் பாராட்டிப் பேசினார்கள். திட்டத்தை இந்தியாவில் எங்கும் பரப்பலாம் என்றார்கள். அதுவும் வெற்றியோடு பரவியது. ஸ்தாபனத்தின் தலைவருக்கு அந்த ஸ்தாபனத்தில் 130 ஆண்டுகளாக இல்லாத பெருமை அடுக்கடுக்காக வர ஆரம்பித்தது. ‘ஏதோ ஸ்டண்ட் என்று நினைத்து முதலில் இதற்கு இசைந்தேன். இந்தியா முழுவதும் வெற்றியுடன் இந்த அளவுக்குப் புகழ் பரப்பும் என நான் கனவிலும் நினைக்கவில்லை’ என்றார் அந்தத் தலைவர்.

அனுபவமான பக்தர்கள் ஒரு காரியத்தை நாடிப் போகும் பொழுது, ஒரு முடிவு எடுக்கத் தயங்குவார்கள். உதாரணமாக மகனை இன்ஜினீயராக்க வேண்டும் என்று ஒருவர் பிரியப்பட்டால், அன்னை அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார். தம் விருப்பம் எவ்வளவு பெரியதானாலும், அதை ஒதுக்கி வைத்துவிட்டு "அன்னை எந்த வழி காட்டுகிறாரோ அதையே நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று அவர் விரும்பினால், அன்னை அவரை ஒரு பேரூற்றருகில் கொண்டு போய் விடுவார். Dr. M.S. சுவாமிநாதன் பட்டம் பெற்றபின் I.P.S. பரீட்சைக்குச் செல்ல அவருடைய தகப்பனார் பிரியப்பட்டார். அவரும் I.P.S. எழுதிப் பாஸ் செய்தார். பாஸ் செய்தபின் தகப்பனாரிடம் தமக்கு (research) ஆராய்ச்சியில் ஆர்வம் இருப்பதாகவும், I.P.S.-ஐ விரும்பவில்லை என்றும் தம் கருத்தைத் தெரிவித்தார். தகப்பனார் தம் கருத்தை விலக்கி, மகனுடைய விருப்பத்தை ஏற்று agriculture research-க்கு அனுப்பினார். உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக சுவாமிநாதன் விளங்கியபொழுது ஒரு பத்திரிகை, "அன்று அவர் தகப்பனார் சொற்படி I.P.S.-இல் சேர்ந்திருந்தால், சுவாமிநாதன் இன்று I.G.-ஆக ரிடையர் ஆகியிருப்பார். உலகம் ஒரு விஞ்ஞானியை இழந்திருக்கும்" என்று எழுதியது. தம் கருத்தை விட்டுக்கொடுத்து பிறர் கருத்தை ஏற்றுக்கொள்ளும் இடத்தில் ஆண்டவன் செயல்பட முடிகிறது. தம்மை விலக்கி அன்னையை ஏற்றுக்கொண்டால் அன்னை நம்மை வாழ்க்கையில் உள்ள ஓர் அமுதசுரபியில் கொண்டு சேர்க்கின்றார்; ஒன்று பத்தாகிறது; தொட்டதெல்லாம் பலிக்கிறது. வாழ்க்கை போராட்டம் நிறைந்தது என்ற நிலை மாறி, வற்றாத ஊற்றுகள் நிறைந்ததே வாழ்க்கை என உணர முடிகிறது.

கல்வி, விவசாயம், மார்க்கெட், நட்பு, ஸ்தாபனம் போன்ற வாழ்க்கையின் கூறுகளுக்கெல்லாம் சில இடங்களில், சில நேரங்களில் அமுதசுரபியின் அம்சம் ஏற்படுவதுண்டு. பல உதாரணங்கள் மூலமாக அவற்றை விளக்கலாம். அதைத் தவிர்த்து, அன்னையின் ஒளியால் மனிதன் தன்னை எப்படி அமுதசுரபியாக மாற்றிக்கொள்கிறான் என்பதை மட்டும் கவனிப்போம்.



பொதுவாகச் சொன்னால், பக்தி சிரத்தையுடன் அன்னையைத் தெய்வமாக வணங்கும் ஒருவர் 'நல்லவர், சிறப்பானவர்' என்ற விளக்கத்திற்கு உரியவரானால், அவரது வாழ்க்கையில் மேற்சொல்லியது போன்ற நிகழ்ச்சிகளை அடிக்கடி காணலாம். சாதாரண வாழ்க்கையில் சிறப்பானவை எனக் கருதக்கூடியவை அவரது வாழ்வில் நிறைந்திருக்கும்.

உடலால் செய்வது உழைப்பு. அதற்கு ஆர்வமும், அறிவும் துணை நிற்காவிட்டால் உழைப்புக்குப் பலனாக ஊதியம் கிடைக்கும். அந்தத் திறமை மட்டும் உள்ளவன் கூலி வேலைதான் செய்ய முடியும். ஆர்வத்தோடு உழைப்பவனுக்கு மற்றவர்கள் கட்டுப்படுவார்கள். அவன் தலைவனாகிறான். தலைவனானாலும் அவனுக்குத் தெளிவு இருக்காது, திறமை மட்டுமே மிஞ்சி நிற்கும். ஆர்வத்தோடு உழைப்பவனுக்கு அறிவு தெளிவாக இருந்தால், அவனால் பல 'தலைவர்களை' கட்டுப்படுத்த முடியும். தலைவனுக்கு மனிதன் கட்டுப்படுவதைப் போல், அறிவுள்ள ஒருவனுக்குப் பல தலைவர்கள் அடங்குவார்கள். அப்படிப்பட்டவர்களே அரசியல், தொழில் முதலிய துறைகளில் முன்னோடியாக நிற்பார்கள். அந்த அறிவும் இலட்சியத்திற்குக் கட்டுப்படுமேயானால், சுதந்திர இயக்கம் போன்ற பெரிய இயக்கங்களை நடத்தும் தலைவர்களாவார்கள். ஆர்வம் நிறைந்த உழைப்பை, இலட்சிய அறிவுக்கு உட்படுத்தி செயலாற்றும் பெருமக்கள் ஆத்ம விளக்கம் பெற்றவர்களானால், அவர்களால் உலகில் சாதிக்க முடியாதது என்று ஒன்றில்லை. பொதுவாக அப்படிப்பட்டவர்கள் வாழ்வை விட்டு விலகி, அகவாழ்க்கையில் ஈடுபட்டுத் தவம் போன்ற நிலையில் இருக்கப் பிரியப்படுவார்கள். உலக மக்களிடையேயுள்ள நிலைகளின் தரத்தை அடுத்தடுத்துப் பார்த்தோம். இதற்கும் மேலே ஒரு கட்டம் உண்டு. ஆத்ம விளக்கம் பெற்றவர்கள், தாம் பெற்ற ஜோதியை உலகுக்குக் கொடுக்க தம் அறிவைக் கருவியாக்கி, எழுத்தையோ, இலக்கியத்தையோ படைத்தால் உபநிஷதம் போன்றவை உற்பத்தியாகின்றன. (தம் ஆத்ம பலனை வாழ்வில் செயலால் விளக்கம் பெற அவர் விழைந்தால், கிருஷ்ண பரமாத்மாவைப்

போல் போர்க்களத்தினிடையே நின்று கீதோபதேசம் செய்து 56 தேச மன்னர்களிடையே தர்மத்தை நிலைநிறுத்தப் பாடுபடு-கின்றவர் ஆவார்). ஆத்மா பெற்ற விளக்கத்தை உடலின் அணுக்கள் பெற்று, அவை வாழ்வின் அஸ்திவாரமாக வேண்டுமென விழைந்தால், உடலின் அணுக்கள் பொன்னொளி-யால் மிளிர்ந்து உலகத்தின் இருளையும், பொய்மையையும் கரைக்க முற்படும். அதுவே பூரண யோகத்தின் பாதை. அன்னையை வந்தடைந்த அன்பன் தன் வாழ்வு தன் கையில் இல்லை, பிரச்சனையால் நிறைந்தது என உணர்ந்த நிலையில் அவன் உள்ளுணர்வில் ஏற்றுக்கொண்ட அன்னை அவனது பக்குவத்திற்கேற்ப செயல்படுகிறார். அன்னையை ஏற்றுக் கொண்ட அளவில் பக்தனுடைய வாழ்க்கை விளக்கம் பெறுகிறது.

அவனது உடல் சிறு ஊற்று; வாழ்வு அதைவிடப் பெரியது; மனம் உயர்ந்தது; ஆத்மா சிகரமானது. ஆத்மாவை வெளிப்-படுத்தும் மனம், ஆத்மாவைவிட உயர்ந்தது. ஆத்ம விளக்கம் பெற்ற வாழ்வு அதைவிடச் சிறந்தது. ஆத்ம ஒளியால் சுடர்-விடும் உடல் எல்லாவற்றையும் விடச் சிறந்தது. இவையெல்லாம் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் அமைந்த பேரூற்றுகள்.

சேவை செய்யும் பக்தனது உடல் விளக்கம் பெறுகிறது. யோக நூலைப் படிப்பவர்க்குத் தியானம் சித்திக்கிறது. உணர்வால் பெருகுபவர்க்கு உள்ளம் சிறப்படைகிறது. பொதுவாக ஒருவரிடம் இந்த எல்லா அம்சங்களும் கலந்து, ஒன்று அதிகமாகவும், மற்றது குறைந்தும் காணப்படும். ஆனால் இந்த எல்லா நிலைகளும் வாழ்வைவிடப் பெரியவை; பெரிய ஊற்றுகளாகும். வாழ்க்கையின் பிடியில் உள்ள பக்தன் பிரச்சனை வரும்பொழுது அன்னைக்குப் பிரார்த்திக்கின்றான். நேரம் கிடைத்தபொழுது யோக நூலைப் படிக்கிறான். முடிந்தால் சேவை செய்கிறான். அவனது முயற்சிக்குத் தக்கவாறு அன்னை அவனை நாடி வருகிறார். அப்படியின்றி அன்னையை அன்னைக்காகவே விழைந்து அன்னையை நோக்கி ஆத்மா விரைந்து செல்லுமானால், அவனது ஆத்மாவில் அன்னை தோன்றி, நின்று, நிலைக்கின்றார். இது பெரும்பேறு.



எனினும், பலருக்குக் கிடைக்கக் கூடியது. குறிப்பாகப் பக்குவமான ஆத்மாக்களுக்கும், சேவையை அர்ப்பணிப்பவர்-களுக்கும் கிடைக்கக்கூடியது. அந்தப் பேற்றைப் பெற்றவர்கள் அதன்பின் தங்கள் சுபாவத்தையும், பிரியத்தையும், அறிவையும் வெளிப்படுத்தாமல் அன்னையின் ஒளியை மட்டும் வெளிப்படுத்த முயன்றால், அவர்கள் வாழ்வு அன்னையின் அருள் சுரக்கும் அமுதசுரபியாக மாறுகிறது. அவர்கள் வாழ்வைவிடப் பெரியவர்கள். வாழ்க்கையால் அவர்களுக்குச் சேவை செய்ய முடியாது. அவர்களே வாழ்க்கைக்கு வளத்தைக் கொடுத்து சேவை செய்வார்கள்.

எந்தத் துறையில் அவர்கள் செயல்பட்டாலும் அந்தத் துறையில் அவர்களது செயல் அமுதசுரபியாக இருக்கும். பல துறைகளில் செயல்பட்டால் அவர்களது ஆன்மிக வாழ்வு அமுதசுரபிகள் ஜனிக்கும் அமுதசுரபியாக விளங்கும்.

அன்னையை நாடி வந்த செயல் திறம் மிக்கவர்க்கும், நேர்மை நிறைந்தவர்க்கும், பண்பால் பக்குவம் அடைந்த-வர்க்கும், அறிவின் பிழம்பானவர்க்கும், சேவையை ஏற்றுக்-கொண்டவர்க்கும் இந்த நிலையை அடையும் வாய்ப்புண்டு.

★★★★★

### *11. மௌனத்தில் வெளிப்படும் மனோசக்தி*

'இச்சையற்றவர்க்குச் சித்திக்கும்' என்பது தமிழ்நாட்டு வாக்கு. இது ஆத்மிக அடிப்படையில் ஏற்பட்ட உண்மை. இந்த மகத்தான உண்மையின் ஒரு சிறு பகுதி, ஒரு கதிர் போன்ற மற்றொரு உண்மையைப் பற்றிய கட்டுரை இது. நாம் எண்ணிய கருத்தை வெளியிட வேண்டிய காலத்தில் மனத்தைக் கட்டுப்படுத்தி, அதை வெளியிடாமல் இருந்தால், அந்தக் கருத்திற்கு ஒரு சக்தி வருகின்றது. நாம் வெளியிட்டுப் பெறும் பலனைவிட, வெளியிடாமலிருக்கும்போது கிடைக்கும் பலன் அதிகமானது. அந்தச் சக்தி மனத்தின் சக்தியாகும். மௌனமாக நாமிருக்கும்பொழுது சக்தியுடன் வெளிப்படும் எண்ணத்தின் திறனாகும். அதை **silent will** என்கிறோம். பழம்பெரும் பள்ளி ஒன்றில் திறமை மிகுந்த இளைஞர் ஒருவர் ஆசிரியராகச்

சேர்ந்தார். எல்லா ஆசிரியர்களும் அவருடன் விருப்பமாகப் பழகினார்கள். அவருடைய திறமையை வெளிப்படையாகப் புகழ்ந்தார்கள். ஒரு சில ஆண்டுகள் கடந்தன. முதிய ஆசிரியர்கள் இருவர், இவருடைய (இளைஞருடைய) நெருங்கிய நண்பர்கள், பொறாமையால் கொந்தளிக்க ஆரம்பித்தனர். தலைமையாசிரியரிடம் புகார் செய்தனர். தலைமையாசிரியர் இவரை விசாரித்தார். இளைஞர் தாம் நண்பராகக் கருதிய முதிய ஆசிரியரிடமே சென்று இதுபற்றிச் சொல்வார். இதுபோல் 29 புகார்கள். முடிவில் இளைஞருக்கு அறிவு வந்தது. புகார் செய்பவர்கள் யார் என உணர்ந்தார். நெருக்கடி தாங்க முடியாமல் தலைமை ஆசிரியர், ஆசிரியர் கூட்டத்தைப் போட்டு இந்தப் புகார்களை விவாதிக்க ஏற்பாடு செய்தார். இளைஞர்மீது இருந்த 29 புகார்களில் ஒன்று, ‘அவர் அடிக்கடி ஆசிரமம் செல்கிறார்’ என்பது. இதுபோன்ற கூட்டங்களில் தலைவர் தெளிவில்லாதவரானால் நிகழ்ச்சிகள் எந்தப் பாதையில் போகும் என்று சொல்ல முடியாது. பள்ளியின் 100 ஆண்டுகள் வாழ்க்கையில் நடக்காத நிகழ்ச்சி. எல்லா ஆசிரியர்களும் மிரண்டுபோயிருந்தனர். ரகளை நடக்குமா, உத்தியோகம் போகுமா, மற்றவர்களுக்கெல்லாம் எதிர்காலம் எப்படி இருக்கும்? எதனையும் சொல்ல முடியவில்லை. மிரட்சி நிறைந்த முகத்துடன் பீதியுணர்வோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. இளைஞர் **silent will**-ஐக் கடைப்பிடிப்பது என முடிவு செய்தார். தன் மனதிலுள்ள எதையும் பேச வேண்டாம் என முடிவு செய்தார். தலைமை ஆசிரியர் குற்றப்பட்டியலைப் பாதி வரைக்கும் பேசினார். மேலே பேச முடியவில்லை; திணறினார்; நின்றார். ஓர் ஆசிரியர் எழுந்து, “இந்தச் செய்தியெல்லாம் எப்படிக் கிடைத்தது?” என்றார். தலைமை ஆசிரியரின் முகத்தைப் பார்த்தபின், பதில் எதிர்பார்க்காமல் உட்கார்ந்து-விட்டார். புகாரைக் கிளப்பிய முதிய ஆசிரியர் எழுந்தார். “இந்த மாதிரிப் பிரச்சனைகளை.....” என ஆரம்பித்தார். தலைமை ஆசிரியர் பொறுமை இழந்தார். “உட்கார். இங்கு நான் தலைமை ஆசிரியர். நான் என்ன செய்ய வேண்டும் என எனக்கு யாரும் சொல்ல வேண்டியதில்லை. அவரவர் வேலையைச்



செய்யுங்கள். என்னிடம் புகார் கொண்டுவர வேண்டாம்” என்று இரைந்து பேசினார். கூட்டம் கலைந்துவிட்டது. இளைஞரின் மனதில் உள்ள எண்ணத்தை அதே சொற்களில் தலைமை-யாசிரியர் பேசிவிட்டார். அவருடைய மௌனத்திற்குப் பலன் கிடைத்தது. அன்னை அவருடைய மௌனத்தின் மூலம், மனக் கட்டுப்பாட்டின் மூலம் செயல்பட முடிந்தது.

நம் மனத்தின் எண்ணங்களைத் திறம்படப் பேசினால் சிறப்பான பலன் கிடைக்கும் நேரங்களுண்டு. திறமை அதிகமானால், பலனுடைய சிறப்பு அதிகமாகும். ஏதோ ஒரு சமயத்தில் திறமை பலனற்றுப்போகும். எவராலும் எதுவும் செய்ய முடியாமற்போகும். அப்பொழுது மனிதத் திறமை செயல்பட முடியாது; தெய்வம் செயல்பட வேண்டும். அத்தகைய செயலுக்கு மௌனமான மனம் சிறந்த கருவி-யாகும். **B.N.** ராவ் ரிசர்வ் பேங்க் கவர்னர். பர்மீய சர்க்கார் ஆலோசனைக்காக அவருக்கு அழைப்பு அனுப்பியது. போகும் வழியில் அவர் கல்கத்தா ராஜ்பவனில் தங்கினார். இந்து-முஸ்லீம் கலகம் தலைவிரித்தாடும் நேரம். ராவ் அங்கு **I.G.**-யைப் பார்த்தார், விசாரித்தார். **I.G.** போலீஸ் எடுத்த முஸ்தீபுகளை விவரித்தார். கலகத்தை எப்படிக் கட்டுப்படுத்தினார்கள் என்று கூறினார். ராவ் இந்தியப் போலீஸின் திறமையை வியந்தார். பர்மா சென்று திரும்பி வரும்பொழுது ராஜ்பவனில் தங்கினார். கலகம் நிலைகடந்துவிட்ட நேரம். போலீஸை நம்ப முடிய-வில்லை. ராணுவத்தை நம்ப முடியவில்லை. நவகாளியில் பயங்கரப் படுகொலை. மனித யத்தனம் பயனற்றுப் போய்விட்டது. இனி கலகம் தானே அடங்கினால் உண்டு. காந்திஜி நவகாளிக்குச் சென்றார். இந்துக்களையும், முஸ்லீம்-களையும் ‘ராம்துன்’ பாடச் சொன்னார்; அமைதியைப் பரப்பினார். அந்த நேரம் ராவ் அங்கு ராஜ்பவனில் தங்கி-யிருந்தார். மீண்டும் **I.G.**-யைப் பார்க்க நேர்ந்தது; விசாரித்தார். “எல்லாம் ஒரு மனிதன் - காந்திஜி - செய்த அற்புதம்” என்றார். மனிதத் திறமை தேவை; அதற்கெல்லை உண்டு. அது பயன்படாதபொழுது தெய்வம் செயல்படும். நம் வாழ்க்கையில் அதுபோன்ற நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்கள் வருகின்றன.

நம்மை மீறிய சந்தர்ப்பங்களில் நாம் மனத்தை அடக்கி, மௌனமாக இருந்தால் அன்னையின் செயல் சிறப்பாக நடைபெறும். நம் திறமைக்கு உட்பட்ட சந்தர்ப்பங்களிலும் மௌனத்தைக் கடைப்பிடிப்பது அரிது. அது யாருக்கு முடியுமோ அவர்களுக்கு வாழ்க்கையில் யோகத்திறன் ஏற்பட்டுவிடுகிறது. இதற்குப் பெரிய மனிதர்களிடம் போக வேண்டாம். நமக்குத் தெரிந்த சாதாரண நபர்கள் சிலருக்கு இந்தக் குணம் அமைந்திருக்கும். அப்படிப்பட்ட நபர்களிடம் மற்றவர்கள் “நீபாட்டுக்குத் தலையை ஆட்றே, அவுங்க எல்லாத்துக்கும் ஒத்துக்கிறாங்க. இது உன் ராசி” என்று சொல்வதைக் கேட்கலாம். இன்னும் சில பொறுமைசாலிகளைப் பார்க்கலாம். “நானாக எதையும் தேடிப் போக மாட்டேன். தானே வருவது வரட்டும்” என்பார்கள். அவர்களைத் தேடி எல்லாம் வரும்; இது ஒரு பெரிய குணம். எளிய மனிதர்களிடையேகூட தென்படும்.

கேட்டாலொழிய கிடைக்காது என்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. அப்பொழுது கேட்பது சரி. கேட்காவிட்டால் மற்றவர்களுக்கு உன் தேவை எப்படித் தெரியும்? தெய்வம்கூட மனிதன் கேட்கட்டும் என்றுதானே இருக்கிறது. மாறாக, கேட்டதனால் காரியம் கெட்டுப் போகிற சமயம், கேட்டே கெடுத்தோம் என்பது போன்ற நேரமும் உண்டு. இந்த வித்தியாசத்தை எப்படிப் புரிந்துகொள்வது?

உன்னுடைய உரிமையும், தேவையும் நியாயமானவை. ஆனால் மற்றவர்களுக்குத் தெரியாது என்னும்பொழுது கேட்பது சரி. பெண்ணுக்கு மாப்பிள்ளையைத் தேடிப் போக வேண்டியது அவசியம். கல்லூரி சேர விண்ணப்பம் போட வேண்டியது அவசியம். ‘நான் **silent will**-ஐ கடைப்பிடிக்கப்போகிறேன்’ என்று சொல்ல முடியாது. சித்தப்பாவுக்குப் பிள்ளையில்லை. அவருடைய சொத்தை அவர் குடும்பத்திலுள்ள 4 பிள்ளைகளில் ஒருவருக்குக் கொடுக்கலாம். அவருக்கு உன்னைப் பற்றியும், மற்ற பங்காளிகளைப் பற்றியும் முழுவதும் தெரியும். கேட்காமலிருக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். **silent will**-இன் முழுச்சக்தியும் இந்த மாதிரி நேரங்களில் தெரியும். ஒரு கமிட்டி கூட்டம் நடக்கிறது. விழாவை ஆகஸ்டில் வைத்தால் நல்லது.



எல்லோரும் அறிவாளிகளாகவும், நல்லவர்களாகவும் இருந்தால், ஏன் ஆகஸ்டில் கூட்டத்தை வைக்க வேண்டுமென்று சொன்னால் ஏற்றுக்கொள்வார்கள். அங்கு விளக்கம் கொடுப்பது முறை. கமிட்டியில் உள்ளவர்கள் தங்கள் முக்கியத்தை மட்டுமே கருதுபவர்களானால், நீங்கள் சொல்லியதற்காகவே மறுத்துப் பேசுபவர்களானால், விதண்டாவாதக்காரர்களானால், அங்கு விளக்கம் பலன் தாராது; மௌனம் பலன் தரும். முந்திக்கொண்டு வரும் நம் எண்ணத்தைப் புறக்கணிப்பது பிரம்மப் பிரயத்தனம். புறக்கணித்தால் நம் மனதில் உள்ள அதே எண்ணத்தை மற்றவர்கள் அனைவரும் பேசுவார்கள்.

லால்பகதூர் சாஸ்திரியும், இந்திரா காந்தியும் முதன்முறை பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது நாட்டுக்கே ஒரு வியப்பான செய்தியாக இருந்தது. அவர்கள் **silent will** பழகவில்லை. நிலைமையும், அவர்களது மனப்பாங்கும் அமைந்த விதம் அது. அவர்கள் பதவியை நாடவில்லை; பதவி அவர்களை நாடியது. அவர்கள் அந்தப் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் கிடைத்திருக்குமா? அல்லது இவ்வளவு சுமுகமாகக் கிடைத்திருக்குமா என்பது கேள்வி.

வீட்டிலும், ஆபீசிலும் அடிக்கடி நாம் கேள்விப்படுகிறோம், ‘நாங்கள் எல்லாம் ஆசைப்படுகிறோம், கேட்கிறோம். எங்களுக்கு எல்லாம் கொடுக்கவில்லை; பரவாயில்லை. கேட்காத ஒருத்தருக்கு வலியப்போய் ஏன் கொடுக்கிறீர்கள்? என்ன விந்தை இது?’ என்று சொல்லும் சந்தர்ப்பங்களுண்டு.

(தொடரும்)

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னையை நினைப்பவன் பக்தன். அன்னையை மட்டும் நினைப்பவன் சாதகன். அன்னையைத் தவிர வேறெதையும் நினைக்க முடியாதவன் சத்திய ஜீவியத்தை நோக்கிப் போகின்றவன்.

**நினைவு முதிர்ந்து காட்சியாகி, காட்சி வளர்ந்து ஜீவியமாகும்.**

## அன்பர் அனுபவம்

*பிளசிங் பாக்கெட்*

சென்னையில் வீட்டு வேலை செய்யும் பெண்மணி ஒருவர், தனது எஜமானி அம்மாளுக்கு அடிக்கடி ஒரு கவர் தபாலில் வருவதையும், அதை அவர் கண்ணில் ஒற்றிக் கொண்டு கவரிலிருந்ததை தனது கைப்பையில் பத்திரப்படுத்திக் கொள்வதையும் கண்டார்.

இது அடிக்கடி நிகழவே, என்னவென்று எஜமானியிடம் கேட்டாள். பாண்டிச்சேரி ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் மலர்ப் பிரசாதம், ஸ்ரீ கர்மயோகி அவர்களிடமிருந்து வருவது. பயணம் செல்லும் பொழுது பாதுகாப்பு, உடல் நலம், குடும்ப சுமுகம் என எதுவானாலும் துணையாக நான் கருதுவது என அவர் கூறினார்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையாக உள்ள தனது கணவனை அக்கொடிய பழக்கத்திலிருந்து மீட்க உதவுமா எனக் கேட்டாள். கணவனது சட்டையில் பிளசிங் பாக்கெட்டை வைத்துக்கொள்ளச் சொல். நீயும் அன்னையிடம் மானசீகமாக உன் கணவனைப் பார்த்துக்கொள்ளச் சொல் என்றார். தனக்கென ஒரு பிளசிங் பாக்கெட்டை வரவழைக்கச் சொல்லி கேட்டுப் பெற்றாள்.

கணவனிடம் இது சாமிப் பிரசாதம். உன் சட்டைப் பையில் இருக்கட்டும். பத்திரமாக வைத்துக் கொள் எனச் சொல்லி வைத்தாள்.

மாலை வீடு வந்த கணவன், தான் திருச்சி செல்லப் போவதாகக் கூறினான். பெயிண்டிங் வேலை கிடைத்திருப்பதாகவும் வருவதற்கு ஓரிரு மாதங்கள் ஆகும் எனவும் கூறினான்.

பத்திரமாக இருக்கும்படி சொல்லிவிட்டு, பிரசாதம் பத்திரமாக வைத்துக் கொள் எனச் சொல்லி வழியனுப்பினாள்.

கணவன் நினைவு வரும்பொழுதெல்லாம், எங்கு குடித்துவிட்டு விழுந்துகிடக்கிறாரோ என்ற எண்ணம் மேலிட, பிளசிங் பாக்கெட் நினைவு வர அன்னையினை பார்த்துக் கொள்ள சொல்லி வேண்டினாள்.



ஒரு மாதம் சென்ற நிலையில், ஒரு நாள் காலை வீட்டு வேலைகள் முடித்து தனது குடிசைக்கு வரும் வழியில், தெருவில் இருந்தவர்கள், உன் புருஷன் வந்திருக்கிறான்டி என்றனர்.

பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமே, இவர் குடித்துவிட்டு வந்தால் பிள்ளைகளை அடித்துத் துரத்துவாரே என்ற பதற்றத்துடன் குடிசையில் நுழைந்தாள்.

பிள்ளைகளைக் காணவில்லை. என்ன தேடுகிறாய்? பிள்ளைகளைப் பள்ளியில் கொண்டு விட்டுவிட்டேன் என கணவன் சொன்னான்.

குடிக்கவில்லை என்பதை உறுதிபடுத்திக்கொண்டவளாய், சாப்பிடுகிறாயா எனக் கேட்டாள். முதலில் பையில் இருக்கும் சாமான்களை எடுத்து வைத்துக் கொள், வைத்துவிட்டு வா உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்றான்.

பெயிண்டிங் வேலை செய்ய போன இடத்திற்கு பக்கத்து பில்டிங்கில் மது பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீள உதவும் மையத்தின் போர்டைப் பார்த்தேன். தினமும் வேலை முடிந்ததும் அங்குச் சென்று வந்தேன். திருச்சி சென்றதிலிருந்து குடிப்பதில்லை என்று கூறியவனைப் பார்த்து வியந்து ஆனந்தப்பட்டாள்.

★★★

நல்லெண்ணம், பாதுகாப்பு என அன்னையின் அருளைத் தாங்கிவரும் பிளசிங் பாக்கெட்; அதை பவித்திரமான நம்பிக்கையோடு பயன்படுத்தும் அன்பர்களுக்கு அற்புதம் நிகழ்த்தியருளும் என்பதை இந்த அனுபவம் அறுதியிட்டு உரைக்கிறது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நான் சொல்வதை எவரும் கேட்பதில்லை என்பவர் பிறர் கேட்கக் கூடியதை சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். யோக சட்டப்படி பிறருக்கு நாமே எதையும் சொல்லக் கூடாது. அவர்களே கேட்டால், அவர் ஏற்கக் கூடியதை மட்டுமே சொல்ல வேண்டும்.

**அன்னை இலக்கியம்**

# சமூகமே அன்னையின் வெளிப்பாடு

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இல. சுந்தரி

அந்தப் பெரிய கடலுக்குப் பாண்டிச்சேரியில ஒரு கரையிருக்கு, சென்னையில ஒரு கரையிருக்கு. ஆனா எந்தக் கரையும் ஒரே கடலோடதுதான். அது போல எல்லாப் பேர்ல இருக்கிற சாமியும் ஒரே கடவுள்தான்.

அப்படீன்னா ஏன் டீச்சர் வேற வேற பேர் வெச்சுக் கூப்பிடறாங்க?

அது அவங்க அவங்க விருப்பம். இப்ப ஒங்க வீட்ல உங்க அப்பா உன்னை எப்படிக் கூப்பிடுவாங்க?

அப்பா கோதைன்னுதான் கூப்பிடுவார். அம்மாதான் சின்னக்குட்டின்னு கூப்பிடுவாங்க.

பள்ளிக்கூட அட்டண்டென்ஸ்ல?

பூங்கோதைன்னு பேர் கூப்பிடுவாங்க.

உமா உன்னை எப்படி கூப்பிடுவா?

அவ கோதைன்னுதான் சொல்வா.

மற்றபடி உங்க சொந்தக்காரங்கள்ளாம் எப்படிக் கூப்பிடுவாங்க?

எங்க சித்தி சித்தப்பா, அத்தை மாமா எல்லாருமே சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே வான்னு செல்லமா கொஞ்சுவாங்க.

ஓம் பேரு பூங்கோதைதானே? ஏன் எல்லோரும் விதவிதமா கூப்பிடறாங்க?

அதுபோலத்தான் கடவுளையும் நாம விதவிதமா கூப்பிடறோம். எத்தனை விதமா கூப்பிட்டாலும் அது ஒரே கடவுளத்தான்.



திடீர்னு கோதையும், உமாவும் மௌனமாகி ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஏதோ வாட்டமாகக் காணப்படுகின்றனர்.

என்னாயிற்று? ஏன் என்னவோ போலாயிட்டீங்க?

இல்ல டீச்சர் எங்க ரெண்டு பேரோட அப்பாக்களும் எப்பவும் ஒண்ணாயிருக்க மாட்டேங்கிறாங்க. நீங்க சொன்னதெல்லாம் அவங்களுக்கு எப்படிப் புரிய வைக்கிறது என்றனர் குழந்தைகள்.

அதற்கு ஒரு வழியிருக்கு. இந்த மாதம் என்ன பள்ளிக்கூட விழா சொல்லுங்க?

நவம்பர் 14 குழந்தைகள் தினம். நேரு மாமா பிறந்த நாள்.

அன்றைய தினம் உங்களையெல்லாம் வைத்து என் அன்னை சொன்ன கதையை நாடகமா போடப் போகிறோம்.

சரி டீச்சர் என்று சிறுமிகள் உற்சாகமாகமாயினர்.

அன்று நவம்பர் 14 குழந்தைகள் தினத்தைப் பள்ளியில் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு மாணவர்கள் தத்தம் திறமைகளை வெளியிட வாய்ப்பளித்து விழா நடத்தினர். இசை, பேச்சு, நடிப்பு என்று பல போட்டிகள் நடத்தப் பெற்று முதல் பரிசு பெற்ற குழந்தைகளுக்கு மேடையில் வாய்ப்பளித்தனர். வழக்கம்போல் நம் கதாநாயகிகள் முதல் பரிசு பெற்று மேடையில் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றனர். குறிப்பாக சரண்யா பயிற்றிய நாடகம், “உண்மையை அறிய ஆர்வம் கொள்ளுங்கள்” என்பது அனைவர் பாராட்டையும் பெற்றதுடன் மதப்பற்றால் மனம் குறுகிய கோதை, உமாவின் தந்தையர் மனம் மாறி மதம் என்ற குறுகிய வட்டத்தினின்றும் வெளியேறி, ஆன்மிகம் என்னும் அனந்தத்திற்குக் குடியேறிவிட்டார்கள்.

அந்த நாடகம்.

ஓரரசனுக்கு நால்வர் புதல்வர். அக்காலத்தில் சிறப்பாகப் பேசப்பட்ட ஒரு மரம் (கிம்சுகா) பற்றி அறிய ஆவல் கொண்டனர். அதை நேரில் காண விரும்பினர். தம் தந்தையின் தேர்ப் பாகனிடம் தனித்தனியே அம்மரத்தைத் தமக்குக் காட்ட

வேண்டினர். பாகனும் அவர்களைத் தனித்தனியே அவர்கள் கேட்டபோது கேட்ட போது அழைத்துச்சென்று காட்டினான்.

மூத்தவன் கண்ட பருவத்தில் அம்மரம் அந்த மரத்தில் இலைகளோ, மொக்குகளோ, மலர்களோ இல்லாததால் கறுத்த அடிமரத்தை மட்டுமே பார்க்க நேர்ந்தது. இரண்டாவது இராஜகுமாரன் பார்த்த பருவத்திலோ நிறைய இலைகளுடன் மரம் காட்சியளித்தது. அதே பருவ காலத்தில் சில நாட்கள் கழித்து மூன்றாவது இராஜகுமாரன் காணச் சென்றபோது, இலைகளோடு மலர்களும் தோன்றி இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது. அடுத்த பருவத்தில் நான்காவது இராஜகுமாரனை அழைத்துச் சென்றபோது மரம் பழுத்துக் குலுங்கியது.

ஒரு சமயம் நால்வரும் சேர்ந்திருந்தபோது ஒருவர் வந்து கிம்சுகா மரம் எவ்வாறு இருக்கும்? எனக் கேட்டார். அரசிளங்-குமாரர்கள் வேறு வேறு பருவங்களில் தனித்தனியே சென்று அம்மரத்தைக் கண்டதால் அவரவர்கள் தாம்தாம் கண்டவாறு அம்மரத்தை வர்ணித்தனர். இதில் எது உண்மை எனத் தெரியாமல் குழப்பம் வந்தது. நால்வரும் அரசனிடம் சென்று எது உண்மை எனக் கேட்டனர். அவர்கள் நால்வர் கூறியதும் உண்மையே. தனித்தனியே அவர்கள் கண்ட அந்தந்தப் பருவத்திற்குரிய காட்சியே அவர்கள் விவரித்தது எனத் தெளிவுபடுத்தினார் அரசன்.

இந்த நாடகம் முடிவுற்றதும் இந்நாடகத்தின் மூலம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன என்பதை உமாவும், கோதையும், மாறி மாறி விளக்கமளித்தனர். அது பின்வருமாறு:

*இப்படித்தான் பெரும்பாலும் மனிதர்கள் உண்மையின் ஒரு சிறு பகுதியை மட்டும் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் உண்மை முழுவதும் தங்களுக்குத் தெரிந்து விட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள் - உமா.*

*ஓர் உண்மையைக் காண விரும்புவர்கள் தான் கண்டதே உண்மை என அதனை வரையரை செய்து நிலை நாட்டி விடுவார்கள்.*



*பிறகு மேலே தேட வேண்டியது எதுவுமே இல்லை இதோ இதுதான் உண்மை எனச் சட்டம் செய்து வைத்து விடுவார்கள் - கோதை.*

*சாதாரண விஷயங்களில் மட்டும் இல்லாமல் வரம்பற்ற பரம்பொருளுக்கே தாம் கண்டதையே ஒரு கோட்பாடாக்கி மதம் ஏற்படுத்தி விடுவார்கள் - உமா.*

*தாம் கண்ட உண்மையை நம்பவும், அதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் மனிதனுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் தனக்கு மட்டுமே பொருந்தக் கூடிய ஒன்றைப் பிறர் மீது திணிக்கக் கூடாது என்பதை மனிதன் உணர வேண்டும் - கோதை.*

(விழாக் காண வந்த உமாவின் தந்தை தாம் ஒரு நாள் கோதையைத் திருநீறு அணிந்து கொள்ளச் செய்ததை நினைத்து வெட்கப்படுகிறார். கோதையின் திருநீறணிந்த நெற்றியைக் கண்டு “இதென்ன வேஷம்” என்ற தன் வார்த்தையை நினைத்து வெட்கப்படுகிறார் கோதையின் தந்தை)

*கடவுள் தன் படைப்பு முழுவதற்குமாய்த் தன்னை அளிக்கிறார். எந்த ஒரு மதமும் அவரது அருளுக்குத் தனியுரிமை கொண்டாட முடியாது - உமா.*

*மதங்களெல்லாம் தனித்தனியாகப் பிரிந்து நிற்காமல் அனைத்து மதங்களும் ஒன்றாய் இணைந்து ஒன்றை ஒன்று இட்டு நிரப்ப வேண்டும் - கோதை.*

*ஒரு விஷயம் உண்மையான மதிப்புள்ளதாக வாஸ்த்தவமானதாக எப்போது இருக்கும்? நீயே சுதந்தரமாக அதனைத் தேர்ந்தெடுத்துப் பரிசீலித்துப் பயின்று பார்த்து முடிவெடுக்கும் போதுதான் அது உனக்கு வாஸ்த்தவமானதாக பயனுள்ளதாக ஆகும். பிறர் உன்மீது அதைத் திணிக்கும்போது அதற்கு அந்த மதிப்பிராது - உமா*

*நீ தற்சமயம் வாழ்ந்து கொண்டிருக்கும் பரம்பரைச் சம்பிரதாய வாழ்க்கையை நீ தேர்ந்தெடுக்கவில்லை. அது சூழலால் அல்லது பொதுவான மனப் போக்கினால் அல்லது பிறரால் உன்மீது திணிக்கப்பட்டுள்ளது - கோதை.*

*இத்தகைய திணிப்பு ஏதும் நீ இறைவனோடு கொள்ளும் தொடர்பில் இருக்க முடியாது. அது சொந்த மனத்தின் தேர்வாக,*

*இதயத்தின் இச்சையாக ஊக்கத்துடனும், உவகையுடனும் மேற்கொள்ளும் முயற்சியாகவே இருக்கும்* - உமா.

மதத்தின் புறச்சடங்குகளுக்குக் கட்டுண்டு அதற்கு அடிமையாக ஆனோமானால் மதம் ஓர் இடையூறாவது நிச்சயம். அதனுள் அடங்கியுள்ள சாரம் என்னவென்று தெரிந்து கொண்டோமானால் மதமே நமது ஆன்மிகப் பயணத்திற்கு ஒரு விரைவு ஊர்தி ஆகிவிடும் - கோதை.

அறியாமையில் பக்தன் கடவுளுக்குத் தன் விருப்பம்போல் ஒரு வடிவமும், குணமும் ஏற்படுத்தி வழிபட்டாலும் அவனது நம்பிக்கையும் அன்பும் உறுதியாயிருக்கும் பட்சத்தில் கடவுள் அவனை ஆட்கொள்ளத் தவறுவதில்லை - உமா.

இவ்வாறு இவர்கள் மாறிமாறி ஒலிபெருக்கியில் கூற, அவர்களுக்கிடையே ஒரு மாணவன் வருகிறான். அவன், இது குழந்தைகள் தினமா? மதவாதிகள் தினமா? எனக் கேள்வி எழுப்புகிறான். சபையில் பலத்த கைத்தட்டல் எழுகிறது.

இது குழந்தைகள் தினமே. இந்தியாவின் ஒப்பற்ற தலைவரான நேருபிரானின் பிறந்த நாள் என்பதை நாம் மறக்க வேண்டாம் என்று உமா கூற அவளைத் தொடர்ந்து,

ஒருமைப்பாட்டிற்குப் பாடுபட்ட அத்தலைவர் பிறந்த நன்னாளில் மதங்களின் காரணமாக எழும் சண்டைகள் தவிர்ந்து இந்தியா தன்னியல்பான தெய்வீக உணர்வால் ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும் என்பது கருதியே, பிரிவினைகளுக்குக் காரணமான அறியாமையை விலக்க ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் ஆகிய புனிதர்களின் கருத்துகள் இங்குப் பேசப்பட்டன. இது பொருத்தமா இல்லையா என்பதை இவ்விழாக் காண வந்திருக்கும் பெற்றோர்கள், மற்றும் பொது மக்கள் கூற வேண்டும் என உமா கூற கூட்டம் பலத்த கைத்தட்டல், பாராட்டு மொழிகள் மூலம் ஆமோதித்தது.

தலைமை தாங்க வந்த சான்றோர் குழந்தைகளின் திறமைகள் நல்லுறவுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. அதுமட்டுமல்லாது, உள்ளூரிலேயே இன்னமும் குதிரை வண்டியில் பயணம் செய்யும் நிலையை விண்வெளிப் பயணமாக மாற்றிய ஆன்மிகப் பெரியோர்களாகிய மானுடம் கடந்த அதிமானுடம் அறிவித்த ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் கருத்துகளை எடுத்துக்கூறிய புரட்சி மேலும் பாராட்டிற்குரியது. இன்று தார்மீகத் தலைமை என்று உலகிலிருந்தால் அது இந்தியாவுக்கே. நம் நோக்கம் இறைவனை வாழ்வில் வெளிப்படுத்துவது. உலகம் இதுவரை நினைத்துப் பார்த்திராத அக்கருத்தை இந்தியா 2000 ஆண்டுகட்கு முன்பே எட்டிவிட்டது. இவை வளரும் பயிர்களாகிய நம் குழந்தைகள் அறிந்திருப்பது மிக இன்றியமையாதது. இக்குழந்தைகளைப் பெற்ற பெற்றோர் பாராட்டிற்குரியவர். (வேலாயுதம்பிள்ளையும், இராமானுஜ ஐயங்காரும் முதன் முதலாக சிநேக பாவத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வது இங்குக் குறிப்பிடத்-தக்கது) 'அவையத்து முந்தியிருப்பச் செயல், தந்தை மகற்காற்றும் நன்றி' என்ற வள்ளுவர் வாக்கை நிறைவேற்றிய பெற்றோர். "எந்நோற்றான் கொல்" என்ற பெருமையைப் பெற்றுத்தந்த குழந்தைகள் என யாவரும் பாராட்டுக்குரியவர்கள். இக்குழந்தைகள் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வழி-காட்டி ஆசிரியர், அவர்களை விரும்பிப் பெற்ற பள்ளிக்கூடம் என்று யாவரும், யாவும் பாராட்டிற்குரியவரே. மேன்மேலும் பள்ளியும் இதன் ஒருமைப்பாட்டுணர்வும் வளர்ந்து நம்நாடு ஒற்றுமைக்களமாக விளங்க வாழ்த்துகிறேன் என்று பாராட்டுரை வழங்கினார்.

தலைமையாசிரியை பெருமகிழ்வுற்றார். குழந்தைகளி-டையே அவள் (சரண்யா) ஒற்றுமையை சத்தியத்தை வளர்க்க மேற்கொள்ளும் முயற்சிகள் பள்ளிக்கு நல்ல பெயர் பெற்றுத் தருவதை மிகவும் வரவேற்றார்.

விழா முடிவுற்றதும் பெற்றோர்கள் தத்தம் குழந்தைகளை அழைத்துச் செல்கின்றனர். உமாவின் தந்தையும், கோதையின் தந்தையும் சரண்யாவிடம் வந்து "நல்லா தயாரிச்சு நல்லா நடத்தியிருக்கீங்க, எங்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றனர். வேஷத்தைக் கலைத்து தத்தம் இயல்பான ஆடைகளை அணிந்து சரண்யாவிடம் விடைபெற வந்த உமாவும், கோதையும் தங்கள் தந்தையர் இருவரும்

சேர்ந்து வந்து டீச்சரைப் பாராட்டியது கண்டு மகிழ்ந்தனர். அது மட்டுமா? கோதையை வேலாயுதம் பிள்ளை பாராட்டுகிறார். உமாவை இராமானுஜம் பாராட்டுகிறார். குழந்தைகள் சரண்யாவை நன்றியுடன் பார்க்கின்றனர். அது மட்டுமா? வாங்க பிள்ளை சேர்ந்தே போவோம் என்று கோதையின் தந்தை உமாவின் தந்தையைக் கூப்பிட சரண்யா அன்னைக்கு நன்றி சொல்கிறாள்.

நவம்பர் 17 தியான மைய சிறப்புக்கூடலில் இதுவரை எதிரும்புதிருமாயிருந்த கோதையின் தந்தையும் உமாவின் தந்தையும் சரண்யாவுடன் சேர்ந்து சேவை செய்யும் ஆர்வத்தைப் பார்த்து உமாவும், கோதையும் கைகோத்த வண்ணம் மகிழ்வுடன் அன்னையை நோக்கிப் புன்னகையுடன் நன்றி சொல்கின்றனர்.

**சுமுகமே அன்னையின் வெளிப்பாடு.**

(முற்றும்)

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பூரண யோகம் ஆத்மாவின் கர்மத்தை ஏற்கவில்லை. கடவுள் உலகைப் படைத்தார் என்பதை கடவுளே உலகமானார் எனக் கூறுகிறது. ஆத்மாவை மனிதனின் சிறந்த பகுதியாக பூரண யோகம் நினைக்கவில்லை. பிரம்மம் சிருஷ்டியுள் வந்தவுடன் பெற்ற நிலை ஆத்மா என்பது. அவ்வாத்மா சிருஷ்டியுள் தன்னை மறைத்து பரிணாமத்தால் வளர்ந்து முடிவான கட்டத்தில் சத்திய ஜீவியமாகிறது. மோட்சம் பெறுவது ஒரு ஆத்மா. அது பெற்ற ஆனந்தம் ஒரு ஆத்மா பெற்ற ஆனந்தம். சத்திய ஜீவியம் ஆன்மிகப் பரிணாமத்தால் அனைத்து ஆத்மாக்களையும் தன்னுட்கொண்டு சிருஷ்டியில் உள்ள அனைத்து ஆனந்தமும் ஒவ்வொரு ஆத்மாவும் அனுபவிக்கும் நிலைக்கு வருகிறது. உலகிலுள்ள எல்லாச் செல்வமும் எல்லா ஞானமும் எல்லா இன்பமும் ஒவ்வொரு ஆத்மாவும் முழுமையாகப் பெறும் நிலை இது.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# அவமானம் ஆத்ம ஞானம்

அநியாயம் ஆண்டவன் நியாயம். மனம் இனித்து பிறரை விளிக்கும் நேரம் வாய் பழக்கத்தால் குத்தலாகப் பேசும். மனிதன் குத்தலைப் புண்ணாக ஏற்கிறான். என் 650 ரூபாய் சம்பளம் 1000 ரூபாயாக வழி சொல்வியா எனக் கேட்ட நண்பன், என்னிடம் கேட்ட அடுத்த ஒன்பதாம் நாள் 1300 சம்பளத்தில் சேர்ந்தான். 32 ஆண்டிற்குமுன் என்னிடம் நண்பன் இதைக் கண்டான். உனக்கு இதுவும் தெரியுமா என உள்ளம் உணர்ந்தது. ஆனால் வாய் நல்ல சொல் சொல்லியறியாதது. சொல்ல முயன்றான், சொன்னான். “நீ பிழைக்கத் தெரியாதவன்” என்றான். என் 650 ரூபாய் சம்பளத்தை உயர்த்த வழி கேட்டேன், வா சொல்கிறேன் என்றாய், நான் வருவதற்குள் 2000 ரூபாய் சம்பளம் வந்தது. ஆனால் சட்டம் சுருக்கியது. 1300 ஆயிற்று. நீ என்ன சொல்லப் போகிறாய் எனக் கேட்கும்முன், இது எனக்கு வந்தது நீ சொல்வது எல்லாம் இப்படியிருப்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். இதை அறிவேன். இதை வாயால் சொல்ல முயன்றால் “நீ தவறானவன், ஏமாற்றுபவன் என்றே வருகிறது. எனக்குக் காரணம் புரியவில்லை” என்கிறான். “நீ செய்யும் அவமானம் எனக்குப் புறத்தில் ஆத்ம ஞானம், உனக்கு அகத்தில் ஆத்ம விழிப்பு” என்று எனக்குத் தெரியும். “என் நிலம் 7000 பெறும் 8-உம் பெறும். இருந்தாலும் எனக்கு 27000 மனதிலிருக்கிறது. விலை காட்டினேன். 5, 6 ஆண்டாக எவரும் வரவில்லை. உங்களை நாடி 27-க்கு விற்கச் சொன்னேன். உங்கள் நண்பர் 27-க்கு வாங்க சென்னையிலிருந்து வந்தார். நிலம் என் மக்கள் பேரிலிருப்பதால் அவர்களை அழைத்து வந்தேன். பெரிய மகன் 90,000 கேட்டார்.

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

வந்தவர் போய்விட்டார். 6 வருஷம் விலையென வரவில்லை. மறுபடியும் உங்களிடம் என் பையனை அனுப்பிக் கேட்டேன். அவன் அதிகார தொனியால் நீங்கள் கோபப்பட்டீர்கள். 5 வருஷம் கழித்து 27-க்கு விற்க என்னை அழைத்தீர்கள். நான் அந்த நேரம் 81,000-க்கு அக்ரிமெண்ட் எழுதிக் கொண்டிருந்தேன். உங்களுக்குப் பதில் சொல்லவில்லை. அதுவும் கூடி வரவில்லை. மீண்டும் வந்தேன். 27-க்கு வாங்கும் பார்ட்டி உங்களுடன் இருந்தார். நீங்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டதால் நான் 81 வந்து தவறியதைக் கூறினேன். என்னைத் தரிசனத்தில் பார்த்ததாகவும் அதனால் 81 வந்தது எனவும் கூறினீர்கள். எனக்கு எரிச்சல் வந்தது, கோபம் வந்தது. 27 பார்ட்டி வாங்க அவசரப்பட்டார். என்னவோ நினைத்துக்கொண்டு, வந்தது உண்மைதான் போய்விட்டதே என்ன புண்ணியம் என்றேன். மீண்டும் வரும் என்று கூறினீர்கள். மேலும் கோபம் வந்தது. அதை அடக்கிக் கொண்டு எப்படிவரும் என்றேன். சமாதிக்குப் போனால் வரும் என்று கூறினீர்கள். அது 11 மணிக்கு. சமாதிக்குப் போய் வந்தவுடன் 81 திரும்ப வந்தது, முடிந்துவிட்டது. நான் உங்களுக்குச் சொல்லவில்லை. ஒரு மாதம் கழித்துத் தற்செயலாய் இப்பொழுது பார்த்தேன். சொல்கிறேன். நீங்கள் கெட்டவர் என்றேன். என் மகன் 4500 தருவதாகக் கூறி ஏமாற்றி விட்டான்”.

**பலனைப் பெற்றவர் வாய் பேசும் வழக்கம் இதுவே.**
**இதுவரை நான் மாறிப் பார்த்ததில்லை.**